It is in this backdrop, that home assignments and tasks are entrusted to students to help them develop study habits which could also enhance the thinking process. All these combined will make the students become more responsible, reliable and punctual in their daily performance.

It is a sad commentary on our times that the role of a school and its tasks are not accepted by a majority of the parents who expect their children to be bent and moulded to satisfy their ego.

Therefore, the main driving force behind every pupil to make his schooling more relevant to the 21st century is to give the school a freehand to set out its own priorities with the full co-operation of parents. If parents abdicate their rights and duty, the school cannot perform this task efficiently.

ACKNOWLEDGEMENTS

The Chundikuli St. John's Past Pupils' Association UK donated books that comprise a very wide range. Mrs Shanti Arulanantham and Dr Naveenan initiated this project and we thank them sincerely for the effort taken.

The Janashakthi Insurance Company Ltd continues with its commitment to sponsor the Battle of the North. Next year the two schools meet for their centenary encounter. The Limited over game is being sponsored by Singer Sri Lanka. We wish to thank them both for their sporting gesture.

I wish to thank the Bishops of Colombo and Kurunegala, and the members of the Governing Body for their valuable advice and guidance; The Director of Education and the staff for helping in all school matters; Old Boys, Parents and Well-wishers, the donors of the Prize Fund and endowments for their generous contributions and support.

Finally, I wish to thank God who continues to lay his hands upon this institution to bless and guide us into the future.

Thank you

S. Thanapalan
Principal

PRIZE DAY ADDRESS

By

Dr. Devanesan Nesiah

Ven. Archdeacon, the Principal, Staff, Distinguished Guests, Parents, Past and Present Pupils, My wife and I are privileged to be Chief Guests on this most important day of the calendar of St. John's. Let me take this opportunity to attempt to discern, from its history, its distinctive characteristics, draw some inspirations from them, and on that basis, look at some of the options for the future.

One of Colombo's eminent Bishops, Archibald Campbell once suggested that, "A school is largely to be judged by the quality of its old students and the strength of the ties which bind them to the school after they have left." On these criteria, St. John's is undoubtedly a very good school. Is it a great one? What are its distinguishing characteristics? Has it realised the objectives of its founders? Even more important, has it been adapting creatively to ever changing conditions and demands over the decades, and how has it responded to the succession of crises that crossed its path? Let us glance through some of the highlights in the history of the school.

St. John's is among the oldest of the modern secondary schools in this island. Through hundred and eighty two years it has encountered several crises and undergone many radical changes but with no break in continuity. It appears that each crisis has served not to break the spirit of the school but to temper the steel of its resolve; not to depress the quality of its output but to sustain it undiminished; not to slacken the loyalty of the past pupils but to bind them even more closely to the students, staff and parents. Again and again St. John's has demonstrated its resilience in the face of terrible adversity, its capacity to respond creatively to new demands, and to learn and adapt the best practices available without losing the distinctive character and identity of the school. As in the 19th and 20th centuries, could we confidently expect that in the 21st century too St. John's will be an innovative leader and trail blazer?

The Nallur Seminary, as the school was originally called, was established in 1823 with 07 students in the home in Nallur of Rev. Joseph Knight, who was among the earliest of British and CMS missionaries. There was then a pressing need for English language skills and a lack of institutions capable of imparting them. The Nallur Seminary took the lead in meeting that need through English medium schooling. That pioneering spirit has remained with St. John's as it grew, moved to Chundikuli in 1841, transformed into St. John's College in 1891, and in the developments since then.

St. John's played a lead role in the establishment and growth of the local YMCA in the 1880s, and the Jaffna Christian Union in 1907. St. John's was also a pioneer in instituting the College Assembly, the Old Boys Association and the School Magazine in 1904, and the Prefect System in 1908. These are now integral features of secondary schools throughout the island, but they were novel at that time. How deeply school discipline, and the Prefect System on which it is based, is embedded in the culture of St. John's is illustrated by the incident in 1971 when the Government Agent, who arrived in his official vehicle to attend an exhibition in the school premises, was denied admission by the Prefect at the gate, who informed him politely that not even the Government Agent could drive in without a pass. The then Principal Mr. Pooranampillai, saw the incident, walked up and permitted the entry of the Government Agent. He then turned to the Prefect and congratulated him for boldly upholding the rules.

From the outset, the Old Boys Association took serious interest in educational matters. At a meeting in Colombo in 1905, the issue of whether St. John's should prepare students for the examinations of the English or Madras Universities was debated for two hours, and it was resolved that the students would be better served if prepared for the English Universities. At the Annual General Meeting a few months later, it was resolved that, together with other schools in the island, a request should be made to the Senate of the London University to include Sinhalese and Tamil in the syllabuses. At another OBA meeting in 1929, Professor Suntharalingam urged that more attention be paid to the study of the "vernacular". This was in line with the policies of the Jaffna Youth Congress in which the staff and Old Boys of St. John's had a lead role, and also with the theme of Mr. K. Nesiah's book, "The Mother Tongue in Education" published later in 1945.

Several critical emancipation issues surfaced in the early decades of the 20th century, among them caste, class, gender, universal adult suffrage, the use of the national languages, free education, and independence from colonial rule. On all these, Jaffna was home to those at both extremes. The old leaders, including Sir Ponnambalam Ramanathan, were mostly at the conservative end. But a new radical leadership emerged in the wake of World War I, inspired by Gandhi, also by Sir Ponnambalam Arunachchalam, and by new ideologies spreading globally. Young school teachers, mostly in their twenties, and school children in their teens came into the Jaffna Youth Congress, then the most progressive institution of its kind in the island.

Led by Mr. Handy Perinpanayagam, they campaigned vigorously for the abolition

of caste discrimination, for gender equality, for universal adult franchise, for the use of the vernacular in education and in government, and for rapid progress towards "Poorna Swaraj". Caste prejudice in Jaffna was so strong that even Christian missionaries and Church institutions acquiesced in it. In particular, those of the lowest castes were shut out of the leading schools in Jaffna. Canon Somasundaram, then senior mathematics teacher at St. John's, had already raised the issue with the Principal, and St. John's had pioneered a quiet transformation by enrolling boys of those castes. Some years later, at the urging of Mr. K. Nesiah, then a teacher at St. John's and also a Jaffna Youth Congress activist, the school took the transformation a step further by admitting a few of them to the school boarding. On caste, as on many other issues, St. John's led and others followed.

In the pre-independent decades there was much animosity between the Gandhian movement and the British establishment. This arose partly from the independence struggle and partly from economic issues such as the competition between imported British textiles and local handlooms. When Gandhi came to Sri Lanka on the invitation of the Jaffna Youth Congress in 1927, several of the leading Christian schools had British or Irish Principals, and there was some apprehension among teachers and students as to their reaction. As expected, several Principals kept away from the reception to Gandhi. In contrast, Rev. Henry Peto, then Principal of St. John's, not only participated but wore a specially tailored kaddar shirt to demonstrate his appreciation of Gandhi and his ideals. On this issue too, St. John's led.

St. John's was among the first of the leading Christian schools to opt for indigenous management while yet under colonial rule. When Rev. Henry Peto died tragically in 1940, Rev. J. T. Arulanantham was selected to succeed him. Mr. P.C. Gaussen, a British Missionary came in as his Deputy. In a parallel development, Dr. M. Thillaiampalam was appointed Principal of Chundikuli, and a British Missionary, Ms. Foss, as her Deputy.

Diversity has been a distinctive feature of St. John's through much of its history. The early Principals and some other staff were British. One of its Principals, Mr. P. T. Mathai, was from India, and so too many teachers. Hindus have long been very well represented in the student body, in the Old Boys Associations and among the staff. Muslims, Sinhalese, Portuguese and Dutch Burghers and Hill Country Tamils have also been significantly represented. The Sinhalese students were not only from families resident in the peninsula but also from those unconnected to Jaffna. For them, as also for many others resident overseas, notably in Malaysia, St. John's was the first choice purely on educational grounds. Sadly, much of the diversity that enriched St. John's *in earlier decades* has eroded; the school needs to find ways to regain at least a measure of that diversity.

An effective way of realising some aspects of diversity is through the endowment of scholarships and bursaries to students from socially and economically marginalized communities.

In the assisted schools take over crisis in the early 1960s when state assistance was denied to private schools, St. John's and Chundikuli faced the cruel dilemma of becoming state schools or remaining private, but un-assisted and non-fee levying. Fee levying private schools such as S. Thomas', Trinity and Ladies' could continue to charge fees, but the option of becoming private and fee levying was denied to the former assisted schools. Against the advice of many, St. John's and Chundikuli took the extra-ordinarily courageous decision to be private and non-fee levying. They were among the very few in the entire island who so survived till the state policy was changed in 1978, and state financial assistance was restored to such schools. In those 17 lean years they encountered severe financial hardships and made great sacrifices. The official car of the then Principal, Mr. A.W. Rajasekeram, was sold; one by one, the majestic mahogany trees, which were the hallmark of the school, and an inspiration for the College Song composed by Mr. S.J. Gunasegaram, were felled and sold to find money to supplement the donations collected. But St. John's and Chundikuli emerged from this crisis with closer links between the school, parents and Old Boys. Together they demonstrated tenacious determination and capacity to overcome the most daunting adversity.

The 1983 pogrom brought in a flood of students displaced from the South, and St. John's did its best to accommodate as many as possible. The civil war that broke out in 1985 brought more violence closer home. The security situation in Jaffna deteriorated, with travel restrictions, frequent curfews, cordon and search operations, and recurrent violence including indiscriminate shelling and ambushes. Many were killed or injured, and the school buildings and equipment suffered extensive damage. Many teachers and students went away to schools in Colombo, or elsewhere in the island, or overseas.

Survival in Jaffna depended on successfully treading a fine line while balancing the conflicting demands of opposing combatants. Among those who failed to survive was the spirited, courageous and much loved Mr. C. Anandarajan, Principal from 1975 till his assassination in 1985. Despite the tense situation, the family, the church, the school, Old Boys, parents and the community rallied to participate in a low key but dignified funeral. I am happy that the new Administration Block is dedicated in his memory.

Mr. Anandarajan's tragic assassination occurred in a difficult period for Jaffna, climaxing in the Exodus of end October 1995. Mr. Gunaseelan served as Principal, followed by a second spell from Mr. Pooranampillai. Dr. E.S. Thevasahayam then came out of retirement to serve, without pay, for some years. It was during the Exodus that St. John's and Johnians, together with Chundikuli and Chundikuli Girls, again displayed their capacity to endure and overcome great obstacles through innovative adaptation. The two schools pooled their resources and relocated in the Vanni jungles. The available teachers and students gathered there and classes were conducted under trees. There was no assurance of pay for the teachers, or accommodation for anyone, or an early end to the displacement. However, true to the school motto, "Light shineth in darkness", attendance was marked, discipline maintained, the syllabuses followed, and standards maintained. Bishop Kenneth Fernando visited that makeshift school and declared in amazement that St. John's and Chundikuli, in their tenacious commitment to function as best as possible under the most adverse conditions, were second to none in the island. When the schools returned to Jaffna in May 1996, it was found that a third of the student population and many of the staff had left, the buildings were in shambles, and much of the equipment and documents were lost. Your Principal Mr. S. Thanapalan was among those who, with much commitment, stayed with the school before, during and after the Exodus.

The response to the crippling destruction of the school's physical infrastructure brought out another characteristic of St. John's and Johnians. Many schools similarly placed sought funding assistance to repair the damage and restore the status quo ante, keeping the estimates down to limits considered acceptable. In contrast, on the initiative of Mr. S. Sivathasan, President, OBA South Ceylon, a bold and ambitious program to radically redesign and upgrade the school building complex was embarked on in terms of a lay out and building design prepared by a leading firm of architects. The total estimate looked prohibitively high, but the daring approach paid off. The project attracted considerable funding from several sources, including a grant of Rs. 12 million from Norway. When the work is completed the school will have buildings in keeping with its status and modern needs, including space and equipment for computer studies.

It appears that there are two or three areas (including extra curricular activities and special education) in which there may have been some regress everywhere in

Jaffna. St. John's has had a long and rich tradition in these fields. A measure of the quality of education in a school is the level of engagement of students in extra-curricular activities. To what extent are students involved in the organization of school events and the operation of school institutions? The regress may be partly on account of the spread of private tuition and partly on account of security problems. Hopefully, the proposed educational reforms and the peace process will permit significant progress.

In recent decades, many have undervalued the ethos of sports, incorporating the aims of a healthy mind in a healthy body, discipline, team spirit, and sportsmanship with the capacity to take victory or defeat in one's stride. St. John's once produced many national stars and now, after a long slump, is showing signs of recovery. I was present last month when St. John's defeated Trinity in a closely fought 40-overs cricket match. The school play ground will soon expand to include a 400 m track. The boys of St. John's need expert coaching, good equipment and facilities, and a range of fixtures against schools in the South in several sports. Development and exchanges are also needed in other fields, e.g. Music and Theatre.

In the field of special education, it is important, particularly for a Christian school, to provide for 'the differently abled', not only for their sake but also for the sake of all the other boys. All of us have abilities and disabilities. Regular interaction with the specially disabled (including the many disabled by war) as well as with specialized institutions catering to their welfare (e.g. the Nuffield School) is an essential part of the training that St. John's needs to provide for all her students. Every student needs to develop into a useful caring citizen of the community. In this connection, the involvement of the St. John's in Tsunami relief and rehabilitation, through twinning with a school in Point Pedro and another in Mullaitivu, is most welcome.

In the academic field; the results have been excellent despite district quotas in University admissions and many other disabilities. While sustaining the current level of academic achievements in traditional fields of study, it is necessary to look for new openings, notably into the rapidly expanding field of Information Technology and, coming back full circle to the dominant demand at the time the school was founded 182 years ago, the teaching of English. Already many of the more ambitious students are choosing the IT sector in preference (or in addition) to any other. In respect of English, perhaps we may need to bring in teachers from overseas for a few years to supplement

those available locally. Many institutions, some well equipped, many ill equipped, are seeking to meet the growing demand in these sectors. The field is becoming increasingly competitive. This is a challenge that St. John's must successfully face up to if it is to forge ahead.

There are many other avenues worth exploring, some novel but some along which a few other schools have already made some head way. Mr. Sterling Perera, Vice Chair of the National Education Commission, in a public tribute to the school, has reminded us that by 1872 St. John's and a few other schools in Jaffna were teaching Astronomy, Geology and other subjects not taught elsewhere. If Astronomy was taught in the 19th century, why not in the 21st? Finding resources for structures and equipment for an elementary observatory should not be difficult. Perhaps Meteorology too could be included. A few decades ago several schools in Jaffna were involved in an excellent research project based on the lagoons in and around Thondamanaru. That project, with particular focus on the quantity and quality of sub-terrainian water in Jaffna, yet beckons regeneration. Ladies' College has a Department of Vocational Studies which is creating new opportunities for the students. St. Thomas', Gurutalawa, Trinity and Hillwood are among several schools that operate farms; Hillwood has also a good bakery. St. John's needs to do what suits its own resources, needs and vision. Perhaps this could include a Department of Scientific and Vocational Studies, with Computer and English Language classes outside the regular school curriculum, established and operated in partnership with the private sector and national and international institutions. The school could also explore other options (a herbal garden? an arboretum?) that would teach skills and also serve the neighbourhood.

Finally, while guarding against students engaging in political activities, the school should encourage them to explore and debate on economic, social, cultural and civic issues of local, national and global relevance. The range and quality of curricular and extra curricular education and training provided should continue to help Johnians to become responsible citizens and outstanding professionals, and also throw up leaders who could transform our future. We expect no less.

In conclusion, I thank you all for this privilege conferred on us, and for your kind attention.

ஆரம்ப பாடசாலை ஆண்டறிக்கை - 2005

பெருமதிப்புக்குரிய எமது கல்லூரி அதிபர் அவர்களே! எமது அழைப்பை மனம் உவந்து ஏற்றுப் பிரதம விருந்தினராக வருகைதந் துள்ள திருவாளர் கதிர்காமத்தம்பி அவர்களே, அவர்தம் பாரியார் அவர்களே, உங்கள் பிள்ளைகளின் கலை ஆற்றலையும் பரிசளிப்பு விழாவையும் கண்ணாரக்கண்டு மனதார வாழ்த்தி மனதுவக்கப் பெருமளவில் சமுகந்தந்திருக்கும் பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, நண்பர்களே உங்கள் அனைவரையும் எமது கல்லூரி அதிபர் சார்பிலும், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் கள், மாணவர்கள் சார்பிலும் மனப்பூரிப்புடன் வரவேற்றுக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை (2005) ஆண்டறிக்கையை தங்கள் முன் பகர்வதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

பிரதம விருந்தினர்

எமது விழாவிற்குப் பிரதம விருந்தினராக வீற்றிருக்கும் திருவாளர் கதிர்காமத்தம்பி அவர்களை எமது பாடசாலைச் சமூகம் நன்கு அறியும். திரு. கதிர்காமத்தம்பி அவர்கள் தமது இளமைக்கல்வி முதல் உயர் கல்வி வரை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கற்றுப் பட்டப் படிப்பினைப் பெரதேனியாப் பல்கலைக் கழகத்திலும், கல்வி டிப்ளோமாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.

சென். ஜோண்ஸ் கல்லூரியில் 1968ஆம் ஆண்டு ஆசிரியப் பணியில் சேர்ந்து கொண்டார். ஏறக்குறைய சென். ஜோண்ஸ் கல்லூரியில் 33 வருடங்கள் தமது சேவையைத் தொடர்ந்துள்ளார்.

கல்லூரியில் தமிழ் மன்றம், இந்து மன்றம், Pargiter இல்லம் ஆகியவற்றின் பொறுப்பாசிரி யராகவும், கல்லூரிச் சஞ்சிகையின் (Magazine) ஆசிரியராகவும், தரம் 9,10,11 களுக்கான மேற்பார்வையாளராகவும் திறம்படப் பணியாற்றினார்.

ஆசிரியர் மன்றம் தொடக்கம் பல மன்றங் களின் தலைவராகப் பணியாற்றியுள்ளார், நாடக நெறியாட்கையில் வல்லவர். இவர் மேடையேற்றிய "மெழுகுவர்த்தி" நாடகம் அதற்குச் சான்று பகரும்.

புவியியல், தமிழ், சைவம், கணிதம் ஆகிய பாடங்களைத் திறமையாகக் கற்பித்தார். குறிப்பாக இவர் தனது எழுத்திலும், கரும் பலகையைக் கையாளும் முறையிலும், எடுத்த கருமத்தை வடிவமைக்கும் திறனிலும் தனக்கே உரிய தனியான பண்பினால் யாவராலும் பாராட்டப்பட்டவர்.

கற்பித்தற் புலத்தில் ஆக்கப்பணிகளாகத் தமிழ் துறையில் க.பொ.த சாதாரண நிலை மாணவர்களுக்குப் பல கைந்நூல்களை எழுதி வெளியிட்டார். இன்று கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் (Wesley College – Colombo) தமிழ் மொழித்துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார். திருமதி கதிர்காமத்தம்பி அவர்கள் மங்கலம் என்ற மனைமாட்சியில் நின்று இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே போற்றுபவர். செய்யும் தொண்டே தெய்வமென நாளும் நல்ல தொண்டு செய்து இறைபதம் பணிபவர். அவரது கரங்களி லிருந்து பரிசில்களைப் பெற நம் மாண வர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

ஆசிரியர்கள்

கல்லூரியின் ஆரம்பப்பிரிவில் பதினைந்து (15) ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள். வருடத்தின் ஆரம்பத்தவணையில், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் முறையே ஆங்கிலம், விஞ்ஞானம், உடற்கல்வி ஆகிய

பயிற்சிகளைத் திறம்படப் பெற்ற செல்வி S.D. Kularajasingam, செல்வி S. Balaganesan, திரு. V.Kumanan ஆகியோர் மீளவும் எமது பிரிவில் இணைந்துள்ளனர். அவர்களை வரவேற்பதுடன் நீண்ட பணிபுரிய வாழ்த்துகிறோம்.

இவ்வருடம் திரு J.G.N Ariyaratnam ஆங்கிலப் பயிற்சி நெறியை மேற்கொள்ள மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுள்ளார். அவர் தனது கற்கையில் சித்தி பெற்றுவர எமது வாழ்த்துக்கள்.

மாணவர்கள்

இவ்வாண்டில் ஆரம்பப்பிரிவில் 373 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆரம்ப பாடசாலை சிரேஷ்ட மாணவ தலைவனாக செல்வன் ச. சிவமைந்தனும், உப மாணவ தலைவனாக செல்வன் ஞா. ஏபிரகாம் அனோஜனும் கடமையாற்றுகின்றனர்.

இயற்கை அனர்த்தம்

வைகாசி மாதம் 29ஆம் திகதி ஏற்பட்ட பெரும் மின்னல் இடி மழை காரணமாக தரம் 3இல் கற்ற மாணவன் தேவப்பிரியன் சிறீஸ்கந்தராசா தன் சகோதரனுடன் வீட்டில் விளையாடிக் கொண்டு நின்றபோது மின்னல் தாக்கி இறைபதம் அடைந்தார். அவரின் பிரிவுத்துயரால் வருந்தும் பெற்றோர், உற்றாருடன் நாமும் மாணவனின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வி

நிகழும் வருடம் ஆவணி 20ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். மேலும் 19 மாணவர்கள் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளை இப் பரீட்சையில் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

விளையாட்டு

ஆரம்பப் பிரிவுக்கான இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி மாசிமாதம் 19ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக எமது கல்லூரிப் பழைய மாணவனும், ஆசிரிய கலாசாலை இளைப்பாறிய விரிவுரையாளருமாகிய திருவாளர் S. யதுகுலசிங் வருகைதந்து சிறப்பித்தார்.

இப்போட்டியில் Johnstone இல்லம் 176 புள்ளிகளுடன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் தங்கள் தங்கள் வயதுக்குட்பட்ட பிரிவுக்கான முதன்மை வீரருக்குரிய வெற்றிக் கிண்ணத்தைப் பின்வரும் மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

7 வயதுக்கு உட்பட்ட பிரிவில் செல்வன் U. Paranthaman

8 வயதுக்கு உட்பட்ட பிரிவில் செல்வன் P. Thuulakshan

9 வயதுக்கு உட்பட்ட பிரிவில் செல்வன் A. Kishyanthan

10 வயதுக்கு உட்பட்ட பிரிவில் செல்வன் R. Dean Osbert

11 வயதுக்கு உட்பட்ட பிரிவில் செல்வன் R. Sam Abisherk ஆகியோர் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றனர்.

சிறப்பாக 7 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் இரு புதிய சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு ஐங்கோண விளையாட்டுப் போட்டி (Junior Pentathlon Meet)

இப்போட்டியில் செல்வன் R. Sam Abisherk அதிக புள்ளிகளைப் பெற்று முதன்மை வீரனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கீழ்ப்பிரிவு சதுரங்கப்போட்டி (Junior Chess Tournament)

குறித்த போட்டியிலும் செல்வன் R. Sam Abisherk முதன்மை வீரனாகக் கணிக்கப்பட்டுள்ளார்.

Junior Mini Tennis Tournament

கொழும்பில் நடைபெற்ற National Mini Tennis போட்டிகளில் யாழ் மாவட்ட அணி முதன்மையணியாக இரண்டாம் முறையும் வெற்றி பெற்றுப் பாராட்டைப் பெற்றது. இவ்வணியில் எமது பாடசாலை மாணவர்கள் மூவர் பங்குபற்றித் தங்கப் பதக்கங்கள் பெற்றனர்.

குருளைச் சாரணர்கள்

இக்குழுவில் 36 குருளைச் சாரணர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுள் இருவர் தங்கத் தாரகையையும், 9 மாணவர்கள் வெள்ளித் தாரகையையும், 11 மாணவர்கள் புறன்ஸ் தாரகையையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

சுனாமி ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சி

எமது அதிபரின் வேண்டுதலுக்கு இணங்க வடக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் முறையே மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையும், கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டு அப்பாடசாலைகளிற் கல்வி கற்கும் ஐந்தாந்தர மாணவர்களை எமது பாடசாலைக்கு வரவழைத்து அவர்களுக்கான வதிவிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு எமது ஐந்தாம் தர மாணவர்களுடன் கல்வி, சுற்றுலா, விளையாட்டு, கலை நிகழ்வுகள் ஆகிய நிகழ்ச்சிகளில் அம் மாணவர்களையும் இணைத்து ஒரு நல்ல ஆற்றுகையை வழங்கி அவர்களை மகிழ்வித்தோம்.

கல்விச் சுற்றுலா

எமது அதிபரின் வழிப்படுத்தலுக்கமைய பல வருடங்களின்பின் எமது கல்லூரி நான்காம், ஐந்தாம் தர மாணவர்களைச் சுற்றுலா மூலமாக மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு வழிகாட்டினோம். யாழ் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களுக்கும், தொழிற் சாலைகளுக்கும், அலுவலகங்களுக்கும், பாடசாலைச் செலவிலேயே மாணவர்களை அழைத்துச் சென்றோம். இக்கல்விச் சுற்றுலா மாணவர்களுக்குப் பல அனுபவங்களையும், அறிவையும் புகட்டியதோடு, ஆசிரிய மாணவர்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் வளர்த்தது.

ஆங்கிலப் பேச்சு வகுப்புக்கள்

இங்கிலாந்து பழைய மாணவர்கள் சங்கத்துடன் இணைந்து பெருமுயற்சியுடன் எமது ஆரம்பப்பாடசாலை நூலகத்திற்குப் பல் பயன்தரு பெறுமதிமிக்க நூல்களை எமக்கு அனுப்பி வைத்ததோடு, இங்கிலாந்திலிருந்து தனது விடுமுறையைக் கழிக்க இங்கு வருகை தந்த திருமதி சாந்தி அருளானந்தம் அவர்கள் எமது ஆரம்பப்பாடசாலை மாணவர்களதும் ஆசிரியர்களதும் ஆங்கிலம் பேசும் திறனை வளர்ப்பதற்காகத் தனது ஓய்வு

நேரத்தையும் பொருட்படுத்தாது எமது மாணவர்களையும் ஆசிரியர்களையும் மகிழ்ச்சியுடன் அயராது பயிற்றுவித்தமைக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

பெற்றோர்க்கு

நீங்கள் எல்லோரும் உங்கள் பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாகவும் கெட்டிக்காரர்களாகவும் இருக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்கள்தான். நீங்கள் கொண்ட விருப்பங்கள் வெறும் எண்ணங்களாக மட்டும் இருந்துவிட்டால் போதாது. பிள்ளைகளின் வெற்றிகளைக் கண்டு நீங்கள் மனம் மகிழ வேண்டுமாயின் உங்களுக்கென்றும் பல கடமைகள் உண்டு.

ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் நாற்றுமேடையில் வளரும் இளம் பயிர்களைப் போன்றவர்கள். நாற்று வீரியமாகவும் பயன்தரக்கூடியதாகவும் அமைய வேண்டின் விவசாயி மேடைக்கான நிலத்தைத் தெரிவு செய்வதில் இருந்து அதன் வளர்ச்சிப்படி ஒவ்வொன்றிலும் சரியான கண்காணிப்பை அவன் மேற்கொள்கிறான். அதேபோன்று நீங்களும் உங்கள் பிள்ளைகளை ஒழுங்கான கண்காணிப்பில் வளர்க்க வேண்டும். முதலில் ஒவ்வொரு பிள்ளைக்கும் அவன் வாழும் இல்லம் இயன்ற அளவு மகிழ்ச்சிகரமானதாக அமையவேண்டும்.

பிள்ளையானவன் பாடசாலையில் நாளாந்த வேலையைத் தொடங்கு முன் அவனது கடந்த நாள் இரவும், தொடக்க நாள் காலையும் அவனது மனதுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் கொடுத்திருக்க வேண்டும். இல்லாது போனால் பிள்ளை தனது தொடரும் நாளாந்த வேலையில் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செயற்படுவது இயலாமல் போய்விடும். பெற்றோர்களாகிய உங்களுக்கும் பற்பல சமூகக் கடமைகள் உள்ளன என்பது உண்மைதான். ஆனாலும் பிள்ளையின் பொறுப்பைச் சுமக்க வேண்டியவர்கள் பெற்றோர்கள் தான் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

நாளாந்தம் பிள்ளை பாடசாலையில் எவற்றைக் கற்றார்? கற்பித்த ஆசிரியர்கள் பாடசாலை சம்பந்தமாக என்ன வீட்டு வேலைகள் கொடுத்துவிட்டுள்ளார்கள். என்பவற்றைத் தினம் பார்வையிட்டும், கேட்டும் அவற்றிற்கான ஆயத்தங்களுடன் மறுநாள் காலை பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். இது மாணவனது ஆரோக்கியமான கற்கைக்கு நல்லவழிகாட்டலாக அமையும்.

வாழ்வின் வெற்றி திட்டமிடலில் உள்ளதைப் போன்று மாணவர்களது வெற்றியும் திட்டமிடலில் தங்கியுள்ளது. பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கான நாளாந்த வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அந்த நேரத்திட்டத்தின்படி அவர்களைச் செயற்படப் பழக்க வேண்டும். குறிப்பாக காலையில் துயில் எழல், கடவுளை வணங்கல், உணவு உண்ணல், பாடசாலை செல்லல், மாலையில் வீடு திரும்பல், விளையாடல், கற்றல், நித்திரைக்குச் செல்லல் என்ற ஒரு ஒழுங்கான நேர அட்டவணையைத் தினமும் பின்பற்றப் பழக்கவேண்டும். இப்பழக்கம் மாணவரிடம் நேரம்தாளாமையை ஏற்படுத்தி அவனது எதிர்கால வெற்றிக்குத் தூண்டுகோலாக அமையும்.

பிள்ளைகளுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியது பெற்றோர்களின் உரிமை தான். ஆனாலும் பிள்ளைகளின் மனம் விரக்தியடையும் வண்ணம் கட்டுப்பாடுகளையோ, தண்டனைகளையோ வழங்கிவிடக் கூடாது. குறிப்பாக கற்க மட்டும் தான் பிள்ளைகளுக்கு உரிமை உண்டு என்றும் அவர்கள் விளையாடவோ, நல்ல ஒழுக்கமான – மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளில் ஈடுபடவோ

Primary School Parents' Day & Prize Giving



The Chief Guests
Mr S Kathirgamathamby
and Mrs Thilagavathy
Kathirgamathamby
being led to the Hall



The Chief Guest addressing
the gathering



Head Master
Mr D J Thevathasan
presenting his Report



Primary kids on stage

Primary School Inter - House Athletic Meet



The Chief Guest Mr K Yathukulasingh, Retired Lecturer, Govt Teachers' College, being led to the venue





Address by the Chief Guest



A section of the students and visitors

Primary School Christmas Party






Middle School Day



The Principal and the Sectional Heads proceeding towards the venue



The Middle School Supervisor Mr S Antonypillai presenting his Report



Cultural Show by the Middle School students

அவர்களுக்கு உரிமையோ நேரமோ இல்லை என்று அடியோடே மறந்துவிடக் கூடாது. அவ்வாறு மறந்து விடுவதால் நன்கு கற்கக் கூடிய மாணவனும் மிதமிஞ்சிய கட்டுப் பாட்டால் மழைகாணாப் பயிரைப்போல் கருகி விடுவான்.

பெற்றோரும், உற்றோரும் பிள்ளைகளிடம் காணப்படும் திறன்களையும், நல்ல பழக்கங் களையும், ஒழுக்கங்களையும் அவ்வப்போது உடனுக்குடன் பாராட்ட வேண்டும். நீ நல்ல பிள்ளை, நீ நல்ல கெட்டிக்காரன், நீ திறமை யாகச் செய்துள்ளாய், உன்னால் இன்னும் திறம்படச் செய்ய முடியும், நீ வெற்றியடை வாய் போன்ற பாராட்டுவார்த்தைகளால் பிள்ளைகளை மகிழ்விக்கவேண்டும். அவ்வாறான தட்டிக்கொடுப்புக்கள் மாண வனின் மனதில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி எதிர்கால வெற்றிக்கும் நல்ல பிரஜையாக வாழவும் வழிகோலும். மேற் கூறிய கருத்துக்களை நீங்கள் மனதில் கொண்டு நடப்பீர்கள் என நம்புகிறேன்.

நன்றிகள்

எமது அழைப்பை ஏற்று இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, சிறார்களின் நிகழ்வுகள் யாவற்றையும் கண்டுகளிக்க வீற்றிருக்கும் திருவாளர் கதிர்காமத்தம்பி அவர்கட்கும், எமது மாணவச் செல்வங்களின் திறன்களுக்குத் தமது நற்கரங்களால் பரிசில்கள் வழங்கி அவர்களை மகிழ்விக்க மனம் உவந்து வருகை தந்திருக்கும் திருமதி கதிர்காமத்தம்பி அவர்கட்கும் எனது உள்ளம் கனிந்த நன்றிகள்.

எப்பொழுதும் எமக்கு ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கிவரும் பழைய மாணவர் கட்கும், அன்புக்குரிய பெற்றோருக்கும், கல்லூரியின் நலன் விரும்பிகளுக்கும், எமது இன்றைய நிகழ்ச்சிகள் யாவும் செவ்வனே மேடையேற அயராது உழைத்த எமது ஆசிரிய நண்பர்களுக்கும் எனது உள்ளம் கனிந்த நன்றிகள்.

ஆரம்ப பாடசாலை வளர்ச்சிக்குச் சகல விதத்திலும் ஆதரவும், ஒத்தாசையும், வழிகாட்டலும் வழங்கிவரும் எமது கல்லூரி அதிபர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அண்மைக் காலமாக எமது கல்லூரியின் வெளிநாட்டுப் பழைய மாணவர் சங்கக் கிளைகள் தமக்குக் கற்பித்த ஆசிரியர் களுக்குச் செய்யும் நன்றியறிதலாக அவர் களைத் தமது தேசங்களுக்கு அழைத்து உபசரித்து வருகின்றனர். இந்தவகையில் என்னையும் கடந்த சில வாரங்களாக அவுஸ் ரேலியாவின் பழைய மாணவர் சங்கச் சிட்னிக் கிளையினர் அழைத்து உபசரித்தனர். அவர்களது அன்பான உபசரிப்புக்கு எனது மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக இக்கால வேளையில் கல்லூரியில் எனக்கு 'லீவு' வழங்கி என்னை அனுமதித்த அதிபர் அவர்களுக்கும் என்னும் நன்றிகள்.

நிறைவாக இன்றைய நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவுபெற ஆசிகள் தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கும் துதிகூறி விடை பெறுகின்றேன்.

நன்றி

டி.ஜெ.தேவதாசன்

மத்திய பிரிவு ஆண்டறிக்கை - 2005

எமது கல்லூரியின் மத்திய பிரிவின் 2005ஆம்ஆண்டிற்கான ஆண்டறிக்கையைப் பகிர்ந்துகொள்வதில் மிகவும் அகமகிழ் கிறேன். தரம் 6 தொடக்கம் 8 வரையிலான மாணவர்களை உள்ளடக்கிய இப்பிரிவில் நடப்பாண்டில் 465 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். முப்பத்தாறு ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இருவர் கற்கை லீவில் உள்ளனர்.

எமது மத்திய பிரிவு மாணவ குழுவின் தலைமை மாணவனாக செல்வன் J. கப்ஸ்டன் றொசானும் உதவித் தலைமை மாணவனாக செல்வன் V.ஹரிவதனனும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் மேலும் 13 மாணவ தலைவர்கள் இணைந்து செயற்படுகின்றனர். அவர்களது கடமைகள் பாராட்டக் கூடியனவாகவும், நல்ல பயனுள்ள தாகவும் விளங்குகின்றது.

எமது பிரிவில் வருடாந்த செயற்பாடுகளான மாணவர் சுற்றுலா, மாணவர்களுக்கான வானியற் பாசறை என்பன திறம்பட செயற்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். தரம் 7, தரம் 8 மாணவர்களது சுற்றுலாவில் யாழ்ப்பாண பிரதேசக் கைத்தொழிற்சாலைகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், ஆலயங் கள் என்பனவற்றைச் சென்று பார்வையிட்டு ஒரு மகிழ்ச்சியான வெளி நிலைக் கல்வியை அவர்கள் பெற்றுக் கொண்டனர். நடைபெற்ற வானியல் பாசறை எமது பிரிவு ஆசிரியர்கள் பலரது வழிகாட்டலில் மாணவர்கள் கல்லூரி யில் தங்கி, இரவு நேரம் வானம் ஆகிய பேரேட்டை கண்டு கழித்தனர். இவற்றோடு வருடம் தோறும் கொண்டாடப்படும் மத்திய பிரிவுத்தினம் இவ்வருடம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இத்தினத்தில் எமது பிரிவு மாணவர்கள் தமது திறன்களை தனியா கவும், குழுவாகவும் இணைந்து வெளிப்படுத் தியமை மெச்சத்தக்கதாகும். சிறப்பாக இந் நிகழ்வுகளுக்கு மாணவர்களைத் தயார்ப் படுத்தி நெறிப்படுத்திய ஆசிரியர்கள் எல் லோரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

சிறப்பாக எமது பிரிவு மாணவர்களதும் ஆசிரியர்களதும் செயற்பாடுகளுக்கு வழிகாட்டி யாகவும் ஊக்கம் தருபவராவும் விளங்கும் அதிபர் அவர்களுக்கு என்றும் எமது நன்றிகள்.

நிறைவாக எமது மாணவர்கள் காலம் தவறாமை என்ற உயர்ந்த பண்பைப் பேண வேண்டும். மாணவர்கள் கல்விக்கால வெற் றிக்கு முக்கிய காரணிகளில் ஒன்று காலத்தை - நேரத்தை தவறாது கடைப்பிடிப்பதாகும். ஒவ்வொரு மாணவர்களும் நாளாந்தம் பாடசாலைப் படிப்பு நேரம் தவிர்ந்த காலை - மாலை - இரவு ஆகிய நேரங்களுக்குத் தனது வீட்டுச் சூழலுக்கு ஏற்ப ஒரு நேர அட்டவணையைத் தயாரித்து அதன்படி தனது கடமைகளைப் பின்பற்ற வேண்டும். மாணவர் நலனில் அக்கறை கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு இதற்கு ஏற்ற வழிகாட்டிகளாக விளங்குவது மிகவும் முக்கியமானதாகும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நலனுக் காய் அவர்களுடன் அன்பு கலந்து உரையாடி அவர்களது உள்ளக் கிடக்கைகளை இயன்ற வரை அறிந்து அவர்கள் தேவைகளைப் பிரச்சனைகளை நிறைவேற்றக் கூடிய நல்ல ஆரோக்கியமான வீட்டுச் சூழலை ஏற்படுத் திக் கொள்ள வேண்டும். இத்தகைய நல்ல விழுமியங்களை நாம் பின்பற்றும் போது எமது பிள்ளைகளும் அவற்றை ஆவலுடன் கடைப்பிடித்து நல்ல பண்பாளர்களாகி தமது கல்வியிலும் வாழ்விலும் வெற்றி பெறுவர் என்பது உண்மை எனக்கூறி நன்றியுடன் இவ்வறிக்கையை நிறைவு செய்கிறேன்.

S. அன்ரனிப்பிள்ளை


JUBILARIANS



Rev N J Gnanaponrajah



Mr P Sriharan



Mr A Pirapaharan



Mr S Kandasamy



Mr V Sivagnanasegaram



Mr M Sivasubramaniam





Mr V K Sriskandarajah











நல் ஆசிரியப்பணியில் வெள்ளிவிழாக்காணும்

உப அதிபர்

வண. நடராஜா ஜேம்சன் ஞானப்பொன்ராஜா

ஈழத்தின் வடபால் விளங்கும் எழில்மிகுந்த ஏழாலைப் பதி வாழ் தலைமை ஆசிரியர் ஜோண் பொன்னையா நடராஜா அவர்கள் முல்லைத்தீவின் கண் விளங்கும் தண்மையும், செழுமையும் நிறைந்த தண்ணீரூற்றில்வாழ் கண்மணி ஆசிரியை அம்மையாரை இல்லறம் என்ற நல்லறமாக ஏற்று இனிது வாழ்ந்தனர். அவர்களது நன்கலமாகப் பிறந்த நன்மக்கட்பேறுகளில் ஏக புதல்வனாக விளங்குபவர்தான் ஜேம்சன் ஞானப்பொன்ராஜா அவர்கள் ஆவார்.

பெற்றோர் பிள்ளையின் இளமைக்கல்வி வளமே அமையவேண்டித் தம் மகனைத் தரம் ஐந்தில் சென்.ஜோண்ஸ் கல்லூரியில் சேர்த்தனர். மகனும் தனது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை சென்.ஜோண்ஸ் கல்லூரி விடுதி மாணவனாகவே இருந்து கசடறக் கற்றார்.

கல்லூரியில் பயிலும் காலை கல்லூரியின் பல கழகங்களிலும், விளையாட்டுத் துறையிலும் மேம்பட மிளிர்ந்தார். கல்லூரியின் மாணவர் தலைவர் (Prefects' Guild) குழுவிலும், இன்ரறக்ற் கழகத்தின் உபதலைவராகவும், விடுதி மாணவர் ஒன்றியத்தின் தலைவராகவும், கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம், பாடகர் குழு ஆகியவற்றில் செயற்படு அங்கத்தவராகவும் இணைந்து இயன்ற பல பணிகளைப் புரிந்தார். அத்துடன் கல்லூரியில் ஹொக்கி இரண்டாவது அணி அங்கத்தவராகவும், மெய்வன்மைப் போட்டியில் நீண்டதூர ஓட்டங்களின் முக்கிய வீரனாகவும், மெய்வல்லுனர் அணி (Athletic Team) அங்கத்தவராகவும். Johnston இல்லத்தின் முக்கிய உறுப்பினராகவும் விளங்கினார்.

கல்விப்புலத்தில் உயர்கற்கை நெறிகளாகக் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆரம்பக்கல்விப் பயிற்சி நெறியையும், பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரி நெறியையும், Birmingham பல்கலைக்கழக பட்டப்பின் சமயக்கல்வி டிப்ளோமா நெறியையும், மகரகம தேசியக்கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்விமுகாமைத்துவ டிப்ளோமா நெறியையும் திறம்படச் சித்தியெய்தினார்.

சென்.ஜோண்ஸ் கல்லூயிலே தனது ஆசிரியப் பணியில் 1-1-1980 இல் இணைந்துகொண்டவண ஞானப்பொன்ராஜா அவர்கள் தனது பணியிற்கொண்ட பற்று, கடமைத்திறன் என்பவற்றால் உயர்ந்த பொறுப்புகளை அவர் இளைமையிலேயே வகித்தார். குறிப்பாக ஆரம்பப் பாடசாலைத் தலைமை ஆசிரியராகவும், க.பொ.த உயர்தரப் பிரிவு மேற்பார்வையாளராகவும், தொடர்ந்து கல்லூரியின் உப அதிபராகவும் பதவியேற்றுக் கல்லூரிச் சமூகத்தின் நற்பாராட்டுகளைப் பெற்றார். அத்துடன் தனியார் பாடசாலை ஆசிரியர் சேவையில் விசேட தரம் I (Private School Principal GradeI) நியமனத்தையும் பெற்றுக்கொண்டார்.

வண. ஞானப்பொன்ராஜா அவர்களிடம் இளமையில் இருந்தே இணைந்த நற்குணங்கள் பலவற்றுள் மேலான ஒன்றுதான் அவர் மனம் உவந்து செய்யும் சமயப்பணி. தனது சமயப்பணியில் சிறந்த கர்மவீரனாகவே விளங்குகிறார். தனது பணியைச் செவ்வனே செய்யும் நோக்கில் அவர் தன்னைத் திருத்தொண்டனாகத் திருநிலைப்படுத்திக் கொண்டார். அன்றிலிருந்து அவர் ஆற்றும் அரிய பணிகளுக்கு அவர் பொறுப்பாக வகித்த வகிக்கின்ற நிலைகள் சான்றுபகரும். எமது கல்லூரியில் ஆன்மீகக் குருவானவராக (Chaplain), யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவராகச், செயலாளராக, Y.M.C.A ஆளுநர் சபை அங்கத்தவராக, Combined Carols - Youth of the North ஒழுங்கமைப்பாளராக, 1995-1997 காலப்பகுதிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பிரதேசங்களின் குருவானவராக,யாழ் பிரதேசக்குருவானவராக (Area Dean, Jaffna) என அவர் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. இன்றும் அவர் யாழ் பாடசாலைகளுக்கிடையிலான கிறிஸ்தவ மாணவர் கழகத்தின் ஒன்றிணைப்புச் செயலாளராகவும், சுண்டிக்குளி தூய திருமுழுக்கு யோவான் ஆலயக்குருவாகவும், யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் நிவாரண மீள்கட்டுமான ஒழுங்கமைப்பாளராகவும் விளங்கித் தனது சமய, சமூகப்பணியை மனப்பூர்வமாகவும், மனமகிழ்வுடனும் தொடர்ந்து வருகிறார். அத்துடன் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்ததுடன், இன்று அதன் யாழ் பிரிவுத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

எமது உப அதிபர் வண ஞானப்பொன்ராஜா அவர்கள் சமூகத்தில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தனது பயணங்களின்போது எமது கல்லூரிக்காக அரும்பணிகள் பல தொடர்ந்துள்ளார். ஐக்கிய அமெரிக்காவின் கல்வி கலாசார அலுவல்கள் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட தெற்காசிய பாடசாலை ஒத்துழைப்பு செயற்றிட்டமானது அமெரிக்காவின் நோவா தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது இலங்கையின் அமெரிக்க மையத்தினால் (American Centre) தெரிவுசெய்யப்பட்ட மூவருள் ஒருவராக பங்கேற்றார். தாய்வான் தேசிய ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்பட்ட "உலகமயமாகும் சமூகத்திலே கல்விக்கும் ஆசிரிய அமைப்புக்குமான சவால்கள்" எனும் தலைப்பிலான நான்காவது E.I ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டில் கலந்து கொண்டதுடன், தாய்லாந்தில் ஆசிய கிறிஸ்தவ மன்றத்தால் (CCA) நடத்தப்பட்ட Ecumenical Academy யிலும் பங்கேற்றார். இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நேபாளத்தில் நடைபெற்ற "Emergency Communication & Logistics" எனும் தலைப்பிலான பிராந்திய பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியமை, இங்கிலாந்தில் நடைபெற்ற "Responding to Conflict" என்னும் தலைப்பிலான கற்கைநெறியில் இணைந்து பல்துறைசார் விருத்திகளைப பெற்றுக்கொண்டமை என்பன கூறற்பாலது.

எமது உப அதிபர் அவர்களிடம் எடுத்த கருமம் தொடுத்துமுடிக்கும் திறனும் பிறருக்கு உதவும் பண்பும் இயல்பாக அமைந்து விளங்குவது என்றும் எம்மால் போற்ற வேண்டியதொன்றாகும். நோர்வேயில் எமது கல்லூரிப் பழைய மாணவர்களுடன் இணைந்து அங்கு எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து கூட்டத் தொடரைத் தொடக்கி வைத்தார். அமெரிக்காவில் வட கலிபோர்னியா, கலிபோர்னியா, மேரிலாந்து, பாஸ்டன், நியூயோர்க், நியூ ஜேசி, டொரன்ட் மற்றும் டென்மார்க் போன்ற இடங்களில்

பழையமாணவர் சங்கங்கள் செயற்படுவதற்கு இணைப்பாளர்களைத் தெரிவு செய்து ஆதரவளித்தார். கனடா, இங்கிலாந்து நாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்களின் அழைப்பை ஏற்று அங்கு சமூகம் கொடுத்த வேளையில் எமது பாடசாலையின் நிகழ்கால நிலைமை-களையும், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகவும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார்.குறிப்பாக எமது கல்லூரியில், வாழ்க்கைத் தரத்திலும் பொருளாதார நிலையிலும் இன்னலுறும் மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி அரவணைத்து வரும் CCFC நிலையம் சென்று அவர்கள் தம் சேவைகளைப் பாராட்டியும் எமது தேவைகளைப் பகிர்ந்தும் பயன்தரு கருமமாற்றினார்.

எமது உப அதிபர் அவர்கள் மங்கலம் என்ற மனைமாட்சியில் நிறைந்து தன் துணைவியாரோடும், பிள்ளைகளோடும் என்றும் ஆனந்தம் பெறவும், அவர்தம் அரும் பணிகள் எமது கல்லூரியில் தொடரவும், அவரது சேவையில் நீண்டு நிறைந்து எல்லா நலன்களும் பெற்று என்றும் பலத்துடனும், சுகத்துடனும் வாழவும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகள் வேண்டி, இதயம் மகிழ்ந்து, வாழ்த்தி அமைகின்றேன்.

ஆசிரியர்

பொ. சிறிகரன்

வெள்ளிவிழா நாயகன்
பொன்னுத்துரை சிறீகரன்

எமது கல்லூரியின் வெள்ளிவிழா நாயகர் கள் அணியில் ஆசிரியர் திரு பொ. சிறீகரன் அவர்களும் இவ்வருடம் இணைந்து கொண்டமை எமக்கெல்லாம் பெரும் மகிழ் வைத் தருகின்றது.

காரைநகர் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று பேராதனைப் பல்கலைக்கழக விஞ் ஞானப் பட்டதாரியாகத் திகழ்ந்த சிறீகரன் அவர்கள் கணிதம், இரசாயனம் என்பவற்றில் சிறப்புப்பட்டம் பெற்றவர் ஆவார்.

கல்லூரியில் காலடி எடுத்து வைத்த அன்றே தனது நடை, உடை, பாவனை யாவற்றையும் கல்லூரியின் பாரம்பரியத்திற்கு ஏற்ப மாற் றிக் கொண்டார். கல்லூரியின் கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமின்றி சகல துறை களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். விடுதி ஆசிரியராகவும், லியோ கழக பொறுப்பாசிரியராகவும் ஆசிரிய மன்ற தலை வராகவும் தொம்சன் இல்ல பொறுப்பாசிரிய ராகவும், தனது செயற்பாடுகளில் செம்மை கண்டவர். கல்லூரியின் ஆலோசனை சபை உறுப்பினராக நீண்ட காலம் செயற்படும் சிறீகரன் அவர்கள் மானிப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினராகவும், பரீட்சைத் திணைக்களத்தின் இரசாயனவியல் பாடத்தின் மேலதிக சிரேஷ்ட கணிப் பீட்டாளராகவும் பணிபுரிகின்றார்.

இக்கல்லூரியில் ஐந்து அதிபர்களின் சிறப் பான வழிகாட்டலில் தனது பல்பரிமாண செயற் பாடுகளின் ஊடாக கல்லூரியின் உயர்தர வகுப்புக்களின் பகுதித் தலைவராக நியமிக் கப்பட்டுள்ளார். தனது புன்முறுவலினாலும் நேர்மையான நடவடிக்கைகளினாலும் ஆசிரியர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இடை யில் உறவுப் பாலம் அமைப்பதிலும் வல்லவர். மாணவர்கள் அனைவரினதும் மதிப்பைப் பெற்றவர்.

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியையான ரஜனி அவர்களை வாழ்க்கைத் துணை யாகக் கொண்டு மகனும் மகளுமாக இரு செல்வங்களுடன் நிறைவாக வாழும் திரு. பொ.சிறிகரன் சென் ஜோண்ஸ் கல்லூரியில் தனது பணியில் நீண்ட இருபத்தைந்து வருடங்களை நிறைவு செய்துள்ளமை பெருமகிழ்வைத் தருகின்றது.

நான் உயர்தர வகுப்பில் கல்வி கற்றபோது திருவாளர் சிறீகரன் அவர்கள் இக்கல்லூரி யில் ஆசிரியராகக் காலடி வைத்தார். அன்று கண்ட அதே இளமையுடன் எல்லோருக்கும் இனியவராகவும் விளங்குகின்றார். ஆசிரியர் திருவாளர் பொ.சிறீகரன் அவர்கள் நீண்ட காலம் கல்லூரியில் சேவையாற்றி நிறைவாக வாழ கல்லூரி சமூகத்தின் சார்பில் இறையா சியை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு"

ஆசிரியர்
க. நந்தகுமாரன்

ஆசிரியப் பணியில் வெள்ளிவிழாவைக் கண்டு அரும்பணி தொடரும் அழகரட்ணம் பிரபாகரன்

யாழ் நகரின்கண் நல்ல மருதநிலவளம் கொண்ட பிரதேசங்களுள் ஒன்றுதான் உரும் பிராய்ப்பதி, அதன்கண் நல்ஒழுக்க நெறியில் வாழும் அழகரட்ணம் தம்பதியரின் அருமைப் புதல்வன் தான் பிரபாகரன் அவர்கள்.

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் தனது கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர் தனது பாடசாலைக் காலங்களில் விளையாட்டுத் துறையில் சிறந்த வீரனாகத் திகழ்ந்தார். தடி ஊன்றிப் பாயும் நிகழ்வில் ஆசிய ஒலிம் பிக்குழுவிலும், HOCKEY விளையாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் குழுவிலும், அங்கம் வகித்துத் தனது திறன்களை வெளிக்காட்டி நின்றார். இவைதவிர உதைப் பந்தாட்டம் - துடுப்பாட்டம் என்பவற்றிலும் கல்லூரி நிலையில் சிறந்த வீரனாகத் திகழ்ந் தார் என்பது இவர்தம் விளையாட்டுத்துறைத் திறனுக்கு நல்ல சான்றுகளாகும்.

தனது தொழில் நிலையில் அவர் 1980 இல் சென் ஜோண்ஸ் கல்லூரியில் ஒரு விஞ்ஞான ஆசிரியராக இணைந்து கொண்டார். யாழ் பிரதேசத்திலேயே குறிப்பிடத்தக்க ஒரு விஞ்ஞான பாட ஆசிரியர் என்பது இன்று யாவரதும் பாராட்டுக்குரியதாகும்.

சென் ஜோண்ஸ் கல்லூரியில் ஆசிரியர் அவர்கள் HANDY HOUSE பொறுப்பாசி ரியராகவும், பல துறைசார் நிலைகளிலும் அங்கம் வகிக்கிறார். குறிப்பாக Senior Secondary மேற்பார்வையாளராகக் கடமை புரிகின்றார்.

பிரபாகரன் அவர்கள் பார்ப்பதற்கு வெளித் தோற்றத்தில் பலரையும் வியக்கவைத்தாலும் அவரது அகத்தில் மேலான இறை பக்தி கொண்டவர். எந்த விடயங்களைச் செய் தாலும் இறை ஆசி வேண்டியே அவற்றைத் தொடருவார். சுருங்கக் கூறின் அன்பு - கருணை - விசுவாசம் என்ற உயர் பண்பு களைத் தன்னகத்தே கொண்ட அடக்க முடையவர்.

ஆசிரியர் அவர்கள் எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிப்பதில் மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார் செவ்வி அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார் என்பதற்கமையச் செயலாற்றுபவர்.

இத்தகு உயர்திறன்களும் பண்புகளும் கொண்ட ஆசிரியர் அவர்கள் எமது கல்லூரி யில் தனது பணியில் பல்லாண்டுகள் தொடர வும், அவர்தம் இல்லத்தவர் என்றும் இன்புற வும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகள் வேண்டி அவரை வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்

V. K. சிறீஸ்கந்தராஜா

வெள்ளிவிழா நாயகன்
சுப்பையா செட்டியார் கந்தசாமி

"நகுதற்பொருட்டு அன்று நட்டல் மிகுதிக்கண்
மேற் சென்று இடித்தற் பொருட்டு"

என்ற பொய்யா மொழிக்கிணங்க நட்புக்கு இலக்கணமாகி, சென். ஜோண்ஸ் கல்லூரியின் வெள்ளிவிழா நாயகனாகி ஆசிரியத் தொழிலுக்கே மெருகூட்டியவர்தான் ஆசிரியர் திருவாளர் சுப்பையாச் செட்டியார் கந்தசாமி அவர்கள் ஆவார். 1980 முற்பகுதியில் கல்லூரியுடன் தம்மை இணைத்துக் கொண்ட அவர் இன்று இருபத்தைந்து வருட நல்லாசிரியர் சேவையில் நிறைந்து மலர்ந்துள்ளார்.

கந்தசாமி ஆசிரியர் அவர்கள் இருபத்தைந்து ஆண்டு சேவை பூர்த்தியடைந்த நிலையில் கௌரவித்து விழாவெடுத்து புகழ் மாலை சூட்டியதுடன் நூல் வடிவத்திலும் வரை வதற்கு கிடைத்த சந்தர்ப்பம் எனக்கு மிகுந்த மன நிறைவினை அளிக்கின்றது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாவலர் வீதியைச் சேர்ந்த சுப்பையா செட்டியார் தம் பதிகளின் கனிஷ்ட புதல்வனாகப் பிறந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் ஸ்தாபிக்கப்பட்ட நாவலர் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்று, புகழ் பூத்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர் தரக் கல்வியை நிறைவு செய்தவர். மாணவராக இருந்த காலத்தில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி கல்லூரிக்குப் புகழ் சேர்த்தவர். பின்னர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறைப் பட்டதாரியாகி வெளியே வந்து சில காலம் தனியார் கல்வி நிறுவனங்களில் கணிதம், பொருளியல் போன்ற பாடங்களில் ஆசிரியராக பணியாற்றி வரும் நாளில் காலம் சென்ற புகழ் பெற்ற அதிபர் திருவாளர் C.E. ஆனந்த ராஜன் அவர்களால் 1980ஆம் ஆண்டு தை மாதம் தன்னை சென். ஜோண்ஸ் கல்லூரியில் ஆசிரியராக இணைத்துக் கொண்டார்.

ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் கற்றல், கற்பித்தல் மட்டுமல்லாது கல்லூரியின் பல்வேறு துறைகளில் மிகவும் பொறுப்பு வாய்ந்த பணிகளைத் திறம்படவும் சாதுரிய மாகவும் நடாத்தி வந்துள்ளார். குறிப்பாக தமிழ் மன்றத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிகளையும், இந்து மன்றத்தினரால் நடாத்தப்படுகின்ற சைவசமய பாட பரீட்சைகளையும் முன்னின்று நடாத்தி உதவி புரிந்து வருகின்றார். தாய் மொழியாம் தமிழ் மொழியில் மிகுந்த பற்றுடையவராக மிளிர்வதுடன் தமிழ் மொழி, இந்து சமயம் போன்ற பாடங்களை மிகுந்த விருப்பத்துடன் 6-11 வரையான தரங்களுக்கு சிறப்பாகக் கற்பித்து சிறந்த பல பெறுபேறுகளையும் பெற்றுக் கொடுத்தவர். அது மட்டுமல்லாமல் புவியியல், கணிதம், பொருளியல் போன்ற பாடங்களையும் கற்பிப்பதிலும் விற்பன்னராகத் திகழ்கின்றார்.

எழுத்தாற்றலுடையவர். கற்பித்தலோடு அக்கல்வியை ஆக்க முயற்சியாக அச்சிட்டும் அளித்துள்ளார். தமிழ்ப்பாடம் சம்பந்தமாக செயல் நூல்களை எழுதியுள்ளார். இவர்

சிறந்த ஆசிரியவாண்மை மிக்கவர். பட்டப் படிப்பின் கல்வி டிப்ளோமாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். கல்லூரியின் தமிழ் மன்றப் பொறுப்புக் களிலும் இந்து மன்ற செயற்பாடுகளிலும் கூடிய ஈடுபாட்டுடன் உழைப்பவர். கல்லூரி யின் Handy இல்லப் பொறுப்பாசிரியர்களில் ஒருவராகவும் சிறப்பாகப் பணியாற்றுகின்றார். கல்லூரியின் அமைப்புக்களில் நல்ல ஆலோ சகராகவும் விளங்குகின்றார். ஆசிரிய மன்றத்தில் மன்ற நூலகராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். ஆசிரியர் களோடு முரண்படாத நல்ல நண்பராகவே பழகி வருகின்றார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட் பாடுகளை தன்னகத்தே கொண்டு செயற் படுகின்ற ஒரு செயல் வீரர்.

கல்லூரிக்கு அப்பால் சமூக வயப்பட்ட மனிதராகவும் விளங்குகின்றார். வண்ணார் பண்ணை சூழலில் உள்ள ஆலய பரிபாலன சபையில் அங்கத்தவராக இருந்து ஆன்மீகப் பணியில் உழைத்து வருகின்றார். இவர் ஒரு சிறந்த நாவன்மையாளரும் கூட. எப் பொழுதும் ஜனரஞ்சகமாகப் பேசுபவர். கல கலப்பாகப் பேசி எல்லோரையும் கவருகின்ற திறன் அவருக்கே உரியது.

இன்று ஆசிரியர் பொறுப்புக்கள் விரிவடைந் துள்ளன. மாணவர்களுக்குத் தேவைப்படும் அறிவுரை பகர்தலும், வழிகாட்டலும் இன்றைய கல்வி அமைப்பில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மாணவர்களது ஆளுமை இணைந்த முழு வளர்ச்சியைப் பெற கல்லூரிகள் பல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம் என உணரப்படும் இக்காலத்தில் முதிர்ந்த ஆசிரியர்களது பணியானது முன்னுதாரணமாகி புதிய தலைமுறை-யினரை வழிப்படுத்தி சிறந்த பயனை விளைவிப்பதாகவும் அமையும்.

சிறந்த கற்பித்தல், வகுப்பு ஆளுகை, கண் டிப்பான அரவணைப்பு ஆகிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டு இற்றைவரை சிறப்புற பணியாற்றி வரும் திரு.கந்தசாமி ஆசிரியர் அவர்களின் சேவை மென்மேலும் நீடிக்கவும் அவர் தம் துணைவியாரோடும் பிள்ளைகளோடும் இன்பமுடன் ஆரோக்கியமாக இனிது வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ஆசிரியர்

பா. காசிநாதன

இருபத்தைந்து வருட நிறைவில் இசைத்தமிழ் வளர்க்கும் ஆசான் விஸ்வநாதன் சிவஞானசேகரம்

யாழ் ஒலித்த இசைவழியில் அதன் கண் அமைந்த அளவெட்டி ஊரில் திரு விஸ்வ நாதன் தம்பதியர்களது புதல்வன்தான் திரு சிவஞானசேகரம் அவர்கள்.

இளமைப்பருவம் முதல் ஆசார ஒழுக்கமு டையவராய்த் தனது ஆரம்பக் கல்வியை அருணோதயாக் கல்லூரியில் பெற்றார். உயர் கல்வி வேண்டி அயலமைந்த ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரியில் இணைந்து கற்றார்.

கற்றல் காலத்தில் இசைத்துறையில் பெரும் நாட்டம் கொண்டவராகவும், அத்துறையில் கல்லூரியிலும், கல்லூரிசார் சூழல்களிலும் பல பரிசில்களை இசைப் போட்டிகளில் பெற்றும் பலரது பாராட்டைப் பெற்றார்.

உயர்கல்வியைத் தொடர்ந்து விவேகானந்த சபையினரால் வழங்கப்படும் புலமைப் பரிசிற்கு-ரியவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் காரணமாக தமிழகம் சென்று திருப்பனந்தாள் ஆதினச் செந்தமிழ்க் கல்லூரியில் பண்ணிசை பயின்று அங்கு "பண்ணிசை வாணர்" என்ற உயர் பட்டத்தைப் பெற்றார்.

திருப்பதைந்தாள் ஆதினம் ஆசிரியரது திற மையைப் பாராட்டி அவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் இசைபயில வாய்ப்பளித்துக் கொடுத்தது.

அசிரியர் அவர்கள் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தில் இசைபயிலும் காலத்தில் அப்பல் கலைக்கழகத்துக்கே உரிய உயர் விருதா கிய மறைந்த தமிழ் முதலமைச்சர் கலாநிதி M.G.R அவர்களது நன் கொடையாக வழங்கப் பெறும் தங்கப்பதக்கத்தைப் பெற்ற முதன் மைக்குரிய இசை மாணவனாகத் திகழ்ந்தார்.

என்று எல்லோரும் எல்லாமும் பெற்றுப் பூரண சமத்துவம் பூத்துக் குலுங்க வேண்டும் என்று பேரவாக் கொண்டவன் பாரதி. "தனியொருவருக் குணவில்லையெனில் சகத்தினையே அழித்திடுவோம்" என்று கர்ஜித்த பாரதி இன்றிருந்தால், "நாய் கடிக்கும் கவனம்" என்று படலையில் தொங்கும் பதாதைகளைத் தீயிட்டுக் கொழுத்தியிருப்பான். எனவே, "மூப்பது கோடியும் வாழ்வோம் வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்" என்று முழங்கப் பாரதி வரவேண்டும். தமிழர் சமுதாயத்தில் கற்பு நெறியும், நாகரிகக் கருத்தும், துணிச்சலும், தாய்மையும் மிக்க புதுமைப் பெண்ணைக்காண வேண்டும் என்று பாரதி துடியாய்த் துடித்தான். "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதனால் அறிவினிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்றும் "மாதர் தமை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்றும் முழங்கிய பாரதி இன்றிருந்தால் "அடுப்பூதும் பெண்களிற்குப் படிப்பெதற்கு" என்ற ஆன்றோர் மடமையில் இன்னும் தூங்கிக் கிடக்கும் பெண்களைத் தட்டி எழுப்பியிருப்பான். அத்தோடு ஆணையும் விஞ்சி இந்த உலகையே ஆட்டிப் படைத்து அழிவுப்பாதைக்கு வித்திடும் அநாகரிகப் பெண்களின் கால்களை அடித்து முறித்து வீழ்த்தியிருப்பான்.

"காதலொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவிலும் கைகொடுத்தே மாதரறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்வமடி" என்று பெண் விடுதலைக்கு ஒரு கும்மியே கொட்ட எமக்கு வேண்டும் இன்று பாரதி."என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்" என்று "விதந்தரு கோடி இன்பம் விளைந்தெனை அழித்திட்டாலும் சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே" என்றும் கம்பீரமாய்க் கர்ஜிக்க எமக்கு வேண்டும் இன்று பாரதி.

அனைத்துமே தெய்வம் என்று உணர்ந்து உணர்த்தியவன் பாரதி. அதனால் தான் சக்தியைச், சிவனை, கண்ணனை, முருகனை வாழ்த்திப் பாடிய பாரதி அல்லாவின் கருணையையும், இயேசு பிரானின் கீர்த்தியையும் பாடியது போல் எம்மதமும் சம்மதமே என்றணர்த்தப் பாரதி வரவேண்டும்.

அக, மனித விடுதலை, பெண் விடுதலை, சமுதாய நீதி, சமத்துவ உணர்ச்சி, சாதிக் கொடுமைத் தகர்ப்பு, இறையுணர்வு, ஒழுக்கம், தீர்க்க தரிசனம், பிறமதங்களில் மதிப்பு, காதல் உணர்வு, ஒற்றுமை, கற்பு நெறி போன்ற சமுதாய அம்சங்களை மீள வலியுறுத்த பாரதி வரவேண்டும்.

அதுமட்டுமா! நவநாகரிகம் என்ற போர்வையில நடக்கும் அநாகரிகச் செயல்களைத் தட்டிக் கேட்கவும், நவீன முகாமைத்துவத்தையும், நவீன மயமாக்கல்களையும், எள்ளி நகையாடவும் அவற்றின் உண்மைத் தன்மையை அவற்றின் சாராம்சத்தை உலகிற்கு பறைசாற்றவும் பாரதி வரவேண்டும்.

இறுதியாக, கிராம சமுதாயம், சிக்கன வாழ்வு, தொழிற்கல்வி, மொழிக்கல்வி. மேன்மை தரும் விவசாய அபிவிருத்தி போன்ற நல்ல திட்டங்களைப் பறை சாற்றவும், தேசத்தைச் சீரழிக்கும் தலைவர்க ளையும், மற்றவரின் உழைப்பை, உணவை, உரி மையைச் சூரண்டி வாழும் நீசர்களையும் அழித் தத் தேசத்தை உயிர்ப்பிக்கவும், தமிழை மீட்சியுற வைப்பதற்கும், தமிழரின் தலைமைத்துவத்தைப் பறைசாற்றவும், வீரம், மொழி, தேசப்பற்று என்பன கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்கவும்

எமக்கு வேண்டும் இன்று பாரதி!
எமக்கு வேண்டும் இன்று பாரதி!

இ. சசீவன
தரம் - 13

உழவுத் தொழிலின் மேன்மை

எமது வாழ்வுக்கு உணவளிக்கும் தொழில்களில் உழவுத்தொழிலே முதன்மையானது. உழவன் சேற்றில் இறங்காவிடில் நாம் சோற்றைப் பெறவும், காணவும் முடியாது. உழவனிடம் ஏனைய தொழில் செய்வோர் பின் செல்வர். உழவுத்தொழில் செய்பவர்களுக்கு உணவுக்குப் பஞ்சம் ஒருபோதும் வராது. எவர் கையையும் எதிர்பாராது செய்யும் தொழில் உழவுத்தொழிலாகும். உலகம் உள்ள வரை உழவுத்தொழிலும் நிலைத்து வாழும். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று மகாகவி பாரதியார் பாடினார். உழவன் பிறர் உயிர்களைக் காப்போனாக விளங்குகிறான். உழவனையும், புலவனையும் போற்றாத அரசுகளே இல்லை. உழவர்கள் உயர்வடைய உலகம் மிக்க உயர்வடையும்.

ஸ். மிதுசன்
தரம் 03

காலைப் பொழுதினிலே...

ஏழு வர்ணப் புரவி பூட்டி ஒரு பொற்றேர் சக்கரமேறி நீல வானில் பவனி கண்டான் உதய சூரியன்.

உதயனின் வரவு கண்டு பூமாதேவியைக் கௌவி மூடிக் கொண்டிருந்த காரிருள் மறைய அழகிய அல்லியும் தாமரையும் மொட்டவிழ மல்லிகையும் முல்லையும் வாடிச் சோர்கின்றன.

கிழக்கு வெளுக்கக் கீழ்வானம் சிவக்க உச்சி வானத்தில் வைரங்களை வாரி இறைத்தது போல் பிரகாசித்துக் கொண்டிருந்த விண்மீன்களின் ஒளி குறைய கதிரவன் உதயமாகிறான்.

சேவல் கூவிச் செங்கதிரோனை வரவேற்க, பறவைகள் பல்வேறு குரல்களில் கீதம் இசைக்க, ஆலய மணி ஓசை காலைத்தென்றலில் கலந்து வர அன்றாட அலுவல்கள் எங்கும் தங்காமல் ஆரம்பிக்கின்றன.

"சூரிய பகவானே வருக" என சகல உயிரினங்களும் உதயனை வரவேற்க தாமரை மலர்கள் தம் துணைவனை முகமலர்ந்து வரவேற்கின்றன.

பறவைகளும், பட்சிகளும் கூடுவிட்டு நீலவானில் சஞ்சரிக்க கதிரவன் அண்ட வெளியை எட்டிப் பார்க்கும் அழகே கொள்ளை அழகு.

விவசாயிகள் தம் விளைபொருட்களுடன் சந்தைக்கு விரைய வியாபாரத் தலங்கள்களை கூட்டத் தொடங்குகின்றனர்.

உழவர்கள் தம் எருதுகளுடனும் பசுக்களுடனும் கழனியை நாட உத்தியோகத்தர் தம் வேலைத் தலங்களுக்கு விரைந்து செல்கின்றனர்.

கிழக்கு வானம் வெக்கச் சிவந்து பிரகாசிக்க கதிரவன் தனது மென்மையான கதிர்களை பூமா தேவியின் மேல் மெல்ல மெல்ல படர விட பள்ளிச் சிறார்கள் வெண்புறாக்கள் போல் சீருடை அணிந்து பாடசாலைக்குப் பறந்து செல்கின்றார்கள்.

நீல வான முகட்டின் மீது கோலத் தினகரன் ஏற பரிதியின் பேரொளி பாரெங்கும் பரவ முகில்க் கூட்டங்களுக்கு மத்தியில் தங்கத் தகட்டைப் போல் தினகரன் அசைய பொன்னிறக் கதிர்களின் வெம்மை அதிகரிக்கின்றது.

றொ. டின் ஒஸ்பேட்
தரம் 04

தாவரங்களும் அவற்றின் பயன்களும்

விருட்சம், மரங்கள், தரு எனும் வேறு பெயர்களால் தாவரங்கள் அழைக்கப்படுகின்றன.

மனிதன் உட்பட அனைத்து அங்கிகளும் உணவுக்காக தாவரங்களிலேயே தங்கியுள்ளன.

ஆதிகாலம் முதல் இன்று வரை உறை விடங்களை ஆக்குவதில் தாவரங்கள் பயன்பட்டு வருகின்றன.

சுவைதரு பானங்களும் பழங்களில் இருந்தே பெறப்படுகின்றன.

பல பிராணிகளுக்குங்கூட வாழிடமாக தாவரங்களே அமைகின்றன.

இன்று பல வழிகளில் நம் சூழல் மாசடைந்து வருகின்றது.

தாவரங்கள் மிகையாக இருப்பின் மாசடைதல் குறைக்கப்படும்.

அடர்ந்த காடுகள் பல அரிய விலங்குகளுக்கு வாழிடமாக அமைகின்றன.

பண்டைய மருத்தவ முறைகளில் தாவர மூலிகைகள் பெரும் பங்கு வகித்தன.

மீன் பிடிக்கப் பயன்படும் கட்டு மரங்கள், வள்ளங்கள், என்பன தாவரங்களிலிருந்தே ஆக்கப்படுகின்றன.

தாவரங்களின் பசுமை, பூக்களின் கவர்ச்சி என்பன அனைவரையுமே கவர்ந்திழுக்கும்.

கற்பகதரு என அழைக்கப்படும் பனை மரத்தை நம்பி பல ஆயிரம் குடும்பங்கள் நம் மண்ணில் வாழ்கின்றன.

இன்று நாம் பண்டைய தாவர உணவுகளை தவிர்த்து, மூலிகை மருத்துவத்தைக் கைவிட்டு, தாவரங்களைப் பெருமளவில் அழித்து, ஆரோக்கியம் கெட்டு அவதிப்படுகிறோம்.

எனவே, மரங்களை நாட்டி இயற்கையோடு இசைந்து ஆரோக்கியமாக வாழ்வோம். எதிர்கால சந்ததியையும் காப்போம்.

மரங்களை நாட்டி பயன் பல பெறுவோம்.

மு. தருசிகன்
தரம் 05

நான் ஒரு பறவையானால்

நான் ஒரு பறவையானால் நீலவானில் எனது பட்டுப் போன்ற சிறகடித்துப் பறப்பேன். என் அழகு என்னைத் தவிர்ந்த வேறு யாராலும் பார்க்காமல் நான் மட்டும் இங்கே பறவையாக இருந்தால் நான் என்றொரு கர்வம் கொண்ட வனாய் எல்லையற்ற நீலவானில் பறந்து அனை வரையும் வியக்க வைப்பேன். எனது அழகினைக் காட்டி அனைவரையும் சொக்க வைப்பேன். என்னை மட்டும் புது இனப் பறவையாக இறைவன் படைத்திருந்தால் என நினைக்கும் போதே மெய் சிலிர்க்கிறது.

நான் சிறகு விரித்து வானில் பறக்கும்போது அதோ அன்று பார்த்த அழகான பறவை, இதோ இன்று பார்த்த அழகான பறவை என அனைவரையும் வியக்க வைப்பேன். நான் அழகில் மயிலையும் வென்றுள்ளேன். ஆம்! இவ்வளவு நாளாக பறவை அழகி என பெயர் பெற்றிருந்த மயிலின் கிரீடம் இப்போது என் தலையில் உள்ளது. இப்போது பறவை அழகி நான் தான். மழை பெய்தால் மயில் ஆடும். சித்திரையில் குயில் பாடும். என் நடனத்தைக்காணக் கால நேரமில்லை. ஏனெனில் காலநிலை மாற்றத்தில் மகிழ்பவன் இல்லை. இருப்பதில் மகிழ்ச்சியடைபவன். எனக்குத் தோன்றும்போது ஆடி அனைவரையும் மகிழ வைப்பேன். பாடலில் குயிலையும் வென்ற பறவை நான்தான். அப்போது அழகியாய் இருந்த மயில் அகவினால் காடதிரும். நான் கத்தினால் காட்டிலே கவிதை ஒலிக்கும். காண்பவரைக் கவரும் கட்டழகி நான்.

கொ. அகிலராஜ்

தரம் 06

நான் சென்ற கல்விச் சுற்றுலா

எனது பாடசாலை வாழ்க்கையிலே மறக்க முடியாத நாள் நாம் சென்ற கல்விச் சுற்றுலா. நாம் சுற்றுலா ஒன்று செல்வதற்கு ஆசைப் பட்டோம். எனவே எமது வகுப்பாசிரியரிடம் எமது மனதில் உள்ள ஆசையைக் கூறினோம். அவரும் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. ஆனாலும் அவர் அதிபரிடம் கலந்துரையாட வேண்டும் என்று கூறினார். நாம் மிக ஆசையுடனும் ஆர்வத்துடனும் சுற்றுலா செல்வதற்கு அதிபரின் பதிலை நாடி நின்றோம். அவரது பதிலும் எமக்கு சாதகமாகவே அமைந் திருந்தது. எனவே அகமகிழ்ந்தோம். அந்த நாளை மிக ஆவலுடன் எதிர்பார்த்தோம். எப்போது அந்த நாள் வரும் எனக் காத்திருந்தோம்.

எமது ஆசை நிறைவேறவே ஆசிரியர் எமக்கு, சுற்றுலா அடுத்த வாரம் நாம் செல்ல ஆயத்தப் படுத்தியுள்ளோம் என்றார். நாமும் எமது ஆயத்தங் களை செய்யத் தொடங்கினோம். சுற்றுலா செல்வதென்று கூறிய பின்பு எமக்கு இரவில் தூக்கமில்லை. மனதிற்குள் கற்பனைகள் பல விதமாக வந்து தூக்கத்தைக் கலைத்த வண்ணமே இருந்தன. அந்த நாள் வந்தது. சுற்றுலா செல்வதற்காக அம்மா பற்பல இனிய இனிப்புப் பண்டங்களை எனக்காக ஆக்கி வைத்திருந்தார். நான் காலையிலே எழுந்து எனக்குரிய பைகளை யும் எடுத்து எனது பாடசாலையான சென் ஜோண்ஸ் கல்லூரிக்கு என் அப்பாவுடன் சென்றேன். அங்கு எமக்காக பேரூந்து வண்டிகள் தயார் நிலையில் நின்றன. எனவே கடவுளை வணங்கிவிட்டு பேரூந்தில் குதூகலமாக ஏறினேன். அப்பாவோ பல முறைகள் எனக்கு கவனம் சொன்னார். நானும் அதை கேட்டுச் சென்றேன். நாம் சுற்றுலா செல்லவிருப்பது கண்டிக்கு என அறிந்திருந்தேன். எனவே நினைக்க பயமாக

இருந்தது. எனினும் என் நண்பர்களுடன் சென்ற படியால் எனக்கு பயமிருக்கவில்லை. எமது பேரூந்து A9 வீதி யூடாக விரைந்து சென்றது. சென்று முகமாலை என்னும் இடத்தை அடைந்தோம். அங்கு நாம் பாடசாலை மாணவர்கள் என்ற படியால் எம்மை ஒருவரும் சோதனையிடவில்லை. பின்பு வவுனியாவை அடைந்தோம். அங்கிருந்து கண்டிக்குச் சென்றோம். கண்டி நகரத்தை அடைந்தபோது புது உலகிற்குள் சென்ற அனுபவத்தை எம்மையறியாமலே பெற்றோம். பின்பு பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் உள்ள மலைத் தொடர்களும் வெள்ளி உருக்கி வாத்தாற்போல் வரும் நதிகளையும், தேயிலை, இறப்பர் ஆகிய பணப்பயிர்த் தோட்டங்களையும் பார்த்தபோது எம் கண்களை எம்மால்கூட நம்ப முடியாமல் இருந்தது.

ஆகா! எத்தனை மலைகள், ஆறுகள், நீர் வீழ்ச்சிகள் நெளிந்து நெளிந்து செல்லும் ஆறுகள், எத்தனை. பாதைகளை பார்க்கவே பயமாக இருந்தது. நெளிந்து நெளிந்து செல்வதை எம்மால் காணக்கூடியதாக இருந்தது. அத்தோடு ஒருநாள் நிறைவுற்றது. ஆனால் எமக்கோ அதை நம்பமுடியாதிருந்தது. நாம் தங்குவதற்கு ஒரு பாடசாலையைத் தேர்ந் தெடுத்திருந்தோம். அங்கு இருப்பவர்கள் சிங்கள மாணவர்களாக இருந் தாலும் அவர்கள் எம்மோடு சகோதரர்கள்போல் நடந்து கொண்டார்கள். அவர்களோடு நாம் எமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டபோது அவர்கள் ஒருபோதும் கடலில் குளித்ததே கிடையாது. நாம் இருக்கும் எங்கள் சுற்றாடல் களில் கடலே இல்லை. ஆனால் எமது பிரதேசத் தில் மலைகள், ஆறுகள் பல உண்டு என அவர்கள் கூறினார்கள்.

மறுநாள் விடிந்தது. அன்று நாம் தலதா மாளி கையை பார்க்கப் போயிருந்தோம். அங்கு போகும் வழியில் செல்ல எமக்கு உண்மையாகவே மிகவும் பயமாக இருந்தது. அங்கு போகும் வழியில் பல மலைகளையும் ஆறுகளையும், நீர்தேக்கங் களையும் கண்டோம். அப்பொழுது எமக்கு சிந்தனை ஒன்று தோன்றியது. "கடவுள் எமக்காக எத்தனை அழகான வளங்களை படைத் துள்ளார்" என்பதாகும். அதை நாம் பேணிப் பாது காக்க வேண்டும் என்ற ஆசையும் எமக்குள் ஊசலாடியது.

பின்பு தலதாமாளிகையை நாம் அடைந்தபோது அங்கு புத்தபெருமானின் பற்கள் சில கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்தன. அது ஒரு புனிததலம் என்பதை அறிந்து கொண்டோம். தலதாமாளிகை மிகப் பெரிய கட்டிடம் மட்டுமன்றி அதனுள் பல பொக்கிஷங்களும் உண்டு என்பதை நேரில் பார்த்தோம். பொழுதும் கவ்வியது. அன்றும் அருகில் உள்ள பாடசாலை ஒன்றில் இரவு தங்கி மறுநாள் காலையில் சிவனொளிபாத மலையை பார்க்க சிவனொளிபாதமலை நோக்கிப் பயணமானோம். எமக்கு அந்த மலையில் ஏறு வதற்கு ஆசையாக இருந்தது. எனவே ஆசிரியரின் அனுமதியுடன் எல்லோரும் ஏறினோம். சிறுதூரம் சென்றவுடன் எமக்கு பசி, களைப்பு, தாகம் வந்துவிட்டது. எனவே சற்று நேரம் ஓய்வெடுத்துவிட்டு சென்று கொண்டி ருந்தோம். அங்கு நான்கு மதத்தவர்களும் பத்தியுடனும் ஆர்வத்துடனும் ஏறுவதை எம்மால் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது, எல்லோரும் பக்தியுடனும் ஆர்வத்துடனும் ஏறினோம். அங்கு சென்று மலையுச்சியை அடைந்த நாங்கள் என்ன என்று பார்த்தால் அங்கு ஒரு காலடி இருப்பதை எம்மால் காணக் கூடியதாக இருந்தது. எமது ஆசிரியர் அதைப் பற்றி எமக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார். அதாவது கிறிஸ்தவர்கள் அக்காலடியை ஆதாமி னுடையதென்றும் இந்துக் கள் அக்கால டியை சிவபெருமானுடையதென்றும், பௌத்தர்கள் புத்தருடையதென்றும், முஸ்லீம்கள் பரிசுத்த அல்லாவினுடையதென்றும் கூறினார்கள்.

பின்பு அவர்கள் சூரிய உதயத்தைப் பார்ப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. சூரியன் தீத்தட்டுப்

போல் காட்சியளித்ததை எமது கண்களால் கண்டோம். பின்பு மலையைவிட்டு இறங்கி வந்து நுவரெலியாவிற்கு செல்ல ஆயத்தமானோம். நாம் போகும்வழியில் தேயிலைத் தோட்டங்களில் சுறுசுறுப்பாக தேயிலையை கொய்யும் பெண்களையும் கண்டோம். அப்பிரதேசத்தை நெருங்கியபோது மிகவும் குளிராக இருந்தது.

அங்குள்ள சிறுவர்களை பார்த்தபோது அவர்கள் குளிருக்குள்ளும் சந்தோசமாக விளையாடித் திரிவதை கண்டபோது ஆச்சரியமாக இருந்தது. மறுநாள் நாம் மீண்டும் வீடு திரும்புவதை நினைத்த போது மிகவும் மனதிற்கு கஸ்ரமாகவும் துக்க மாகவும் இருந்தது. இரவுப் பொழுதை அங்கொரு பாடசாலையில் தங்கினோம். மறுநாள் மீண்டும் எமது யாழ்ப்பாணத்திற்கு திரும்ப பேரூந்தில் ஏறியபோது பிரியமில்லாமலே ஏறினோம். ஏறி மீண்டும் ஆறுகள், மலைகளைக் கடந்து யாழ்ப்பாணத்தை அடைந்போது எமக்கு எமது பெற்றோரிடம் எப்படிக் கூறுவதென்றே தெரிய வில்லை. நாம் எமது பாடசாலையை அடைந்த போது எமக்காக எமது வரவை எதிர்பார்த்து நின்றார்கள் எமது பெற்றோர்கள். நான் மீண்டும் மகிழ்ச்சியுடன் வீடு சென்று நான் கண்ட வற்றையும் பார்த்து களித்தவற்றையும் உற வினர்க்கும், அயலவர்க்கும் நண்பர்களுக்கும் கூறி மகிழ்ந்தேன். இதை என் வாழ்நாளில் நான் மறக்கவேமாட்டேன்.

தே. பேடினன்சைலோ
தரம் 07

விஞ்ஞான வளர்ச்சியும் சூழல் பாதுகாப்பும்

இவ்வுலகில் மனிதவள முன்னேற்றத்தினால் விஞ்ஞான வளர்ச்சி அதிகரித்துக் கொண்டு வருகிறது. அத்தோடு இயற்கையாகக் கிடைக்கும் அரும்பெருஞ் செல்வமான சூழல் பாதுகாப்பு ஒரு பின் விளைவை மனிதனுக்கு ஏற்படுத்தும் முகமாக வும் வனவாழ் உயிரினம், நீர்வாழ் உயிரினம், பறவைகள், பிராணிகள், ஈரூடவாழிகள் போன்ற வற்றிற்கு சூழல் பெரும் அழிவை ஏற்படுத்து கின்றது. ஏனெனில் நூற்றாண்டு காலப் பகுதியில் விஞ்ஞானம் அதிக முன்னேற்றம் அடைந்து மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று தளைத்து நிற்பது காரணமாகும்.

வல்லரசு நாடுகளில் ஏற்படும் கைத்தொழில் தொழிற்பாட்டிற்கான போட்டியும் உலக சந்தை யில் பொருட்களை ஏற்றுமதி செய்யவேண்டும் என்பதனால் எத்தனையோ இரசாயனப் பொருட் களைப் பயன்படுத்தி, விஞ்ஞான வளர்ச்சி காரண மாக முதலிடம் பெற்று நின்று, மனித வளத்தை நோய்வாய்ப்படவும் மரணம் எனும் பாதாளத் திலுந்தள்ளிவிடுகிறது. இது எல்லாம் மனித நடவடிக்கை. அநாகரிகமற்ற நடவடிக்கை நோக்கிச் செல்லுதல் காரணமாகும். முக்கிய ஒன்று காடழிப்பு.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் தங்களின் வருமான வளத்தை கூட்டுவதற்கு காடழிப்பு போன்றவற்றைச் செய்கின்றார்கள். ஆனால் நம் நாட்டைப் பொறுத்தவரை பல மடங்கு ஹெக்டேயர் காடுகள் மைதான விருத்தி, நகர மயமாக்கல், சனத்தொகை அதிகரிப்பு, மற்றும் தொழில் வாய்ப்பிற்கு பாரிய தொழிற்சாலை அமைத்தல், நீர் மின் உற்பத்தி போன்ற காரணங்களுக்காக அழிக்கப்படுகின்றன.

உலக சந்தையில் எத்தனையோ மின்சாதனப் பொருட்கள் மனித நடவடிக்கை நேரத்தைக் குறைத்து அவனைச் சோம்பேறியாக்குகின்றது. மின்அடுப்பு, மின் உடுப்புத் துவைக்கும் இயந்திரம், ஓய்வு நேரப் பயன்பாட்டு தொலைக்காட்சி, வானொலி, கிணற்று நீரை இலகுவாகப் பெற்றுக்கொள்ள மின் மோட்டார், மற்றும் மின்காற்றாடி, குளிர்சாதனப் பெட்டி,

குளிர்மைப்படுத்தும் குளிர் கருவி போன்றன அதிஉயர் விலையில் மக்களுக்கு சுய தேவை பூர்த்தி செய்ய பெரிதும் உதவுகின்றன. இதனால் மனிதன் சோம்பேறியாக உடலை வைத்திருக்கிறான்.

உலக நாடுகளுக்கிடையில் எல்லைப் பிரச்சினை காரணமாக யுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. இதன்போது இரசாயன யுத்த தளபாடம் நச்சு பொருந்திக் காணப்படுகின்றது. இது சூழல் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும். மற்றும் மிகப் பெரிதாக அணுகுண்டுப் பரிசோதனையில் வல்லரசு நாடுகள் போட்டியிடுதல், அதனால் சண்டை செய்து அணுகுண்டை நாடுகளுக்கு வெடிக்க வைத்தல், நச்சு வாயுமூலம் ஓசோன்படை பெரும் அழிவுக்குட்படுதல் போனறனவும் சூழல் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைவன ஆகும்.

இயற்கை அனர்த்தம் போன்றன கூடுதலாக மனித முன்னேற்றத்தினாலும் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகவும் ஏற்படுகின்றன. ஏனெனில் வல்லரசு நாடுகள் தங்கள் அணு ஆயுத பரிசோதனையை கடலுக்கடியில் பரிசோதனை செய்வதால் நச்சு அணு வாயுக்கள் நீரினுள் கலப்பதனால் நீர் வாழ் உயிரினம் மாசுபடும். அதை மக்கள் உண்பதால் நோய்வாய்ப்பட்டு மரணம் சம்பவிக்க நேரிடும். இத்தகைய மனித முன்னேற்ற நடவடிக்கையும் விஞ்ஞான வளர்ச்சியும் சூழல் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும் நோக்குடன் வளர்ந்து வருகின்றது.

எனவே, விஞ்ஞான வளர்ச்சியானது சூழல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையா வண்ணம் நடவடிக்கை எடுத்தல் என்பது அனைவரும் எதிர்கொள்ளும் இன்றைய சவாலாகும்.

த. கஜேந்திரன்
தரம் 09

தமிழ் மொழியின் சிறப்பு

மூவேந்தர்களாகிய சேரர், சோழர், பாண்டியர் முச்சங்கம் வைத்து ஆண்ட காலம் தொட்டே தமிழ்மொழியானது தலைசிறந்து விளங்குகின்றது. திருவள்ளுவர் காலம் தொடங்கி பாரதியார் போன்ற இருபதாம் நூற்றாண்டுப் புலவர் கூட தமிழ் மொழியை, அதன் சிறப்பை எடுத்தோதி வருகின்றனர்.

"தமிழுக்கு அமுதென்று பேர் - அத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு மேல்" என்று போற்றப்படுகிறது. நாம் தமிழையே பேசி தமிழிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

"அம்மா என்பது தமிழ் வார்த்தை ஆதலால் குழந்தையின் முதல் வார்த்தை" என கவிஞர் கண்ணதாசன் கூட தமிழ்மொழி பற்றிப் பாடியுள்ளார். தமிழ்மொழியானது எமது தாய்மொழி. இம்மொழி பேச்சுமொழி, எழுத்து மொழி என இரு வகைப்படும். தமிழ் மொழி பேசும்போது இனிமை பயப்பது. எனவேதான் தமிழ் மொழியைப் போற்றி பல பாடல்கள் உள்ளது.

இந்தியாவின் சுதந்திரத்திற்காக போராடிய புரட்சிக் கவிஞர் பாரதி தமிழ்மொழியின் சிறப்பு உலகெங்கும் பரவவேண்டும் என தமது அபிலாஷையை இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார். **"உலகெங்கும் தமிழோசை பரவும் வகை செய்"** என்று அவர் முழங்கிய முழக்கத்தை இன்றும் இலங்கைத் தமிழர் பலர் வெளிநாடுகளான கனடா, லண்டன், ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் பிரதி பலிக்கச் செய்கின்றனர். எங்கு பார்த்தாலும் தமிழ் நாடகங்கள், பாடல்கள், பிரசங்கங்கள் என்று பத்திரிகைகளில் பிரசுரமாகின்றன. அண்மையில் கூட லண்டன் மாநகரில் இலங்கைத் தமிழர் ஒழுங்கு செய்த தமிழ்ச் சங்கத்தின் முத்தமிழ் விழா கோலாகலமாக நடைபெற்றது.

இதிலிருந்து எமது தாய்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பு உலகளாவிய ரீதியில் பெருமை பெற்றுத் தருகிறது என்பதில் ஐயமில்லை.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று பாரதியார் தமிழ்மொழி இனிமையானது கேட்போருக்கு இன்பம் பயப்பது என்ற கருத்தை உணர்த்துகிறார். தமிழ் மொழியிலே பல இலக்கியங்கள் தோன்றி மக்களை நல்வழிப்படுத்தியுள்ளன. உதாரணமாக கொன்றை வேந்தன், திருக்குறள், ஆத்திசூடி போன்றவற்றைக் கொள்ளலாம்.

திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் ஆனது உலகப் பொதுமறை என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இதில் காணப்படுகின்ற அறநெறிக் கருத்துக்களை மேலை நாட்டவர்கள் தமிழ் மொழியிலிருந்து தங்கள் மொழிக்கு மொழி பெயர்க்கின்றனர். எனவே இதிலிருந்து தமிழ் மொழியின் சிறப்பானது நமக்கு விளங்குகின்றது. தமிழ் மொழியானது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்க இலக்கியங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

தமிழ்மொழித்தினமானது முத்தமிழ் வித்தகர் என்று போற்றப்படும் சுவாமி விபுலானந்தர் நினைவாக கொண்டாடப்படுகிறது. எமது இத்தமிழ் மொழியை வளர்த்து வளமூட்டிய அறிஞர்கள் பலர் உளர்.

இலங்கையில் தமிழ்மொழியை வளர்த்த பெரியார்களாக நாவலர், விபுலானந்தர், சேர். பொன். இராமநாதன், சி. வை. தாமோதரம்பிள்ளை போன்ற வர்கள் காணப்படுகின்றனர்.

பாரதியார் தமிழ்மொழியை தாயாகப் போற்றிப் பாடிய தமிழ்த் தாய் வாழ்த்து என்ற பாடல் இன்று தமிழ் மொழியின் தாரக மந்திரமாகத் திகழ்கின்றது. இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். எனவே மாணவர்களாகிய நாம் தமிழ்மொழியின் சிறப்பைப் போற்றி அதனை வளர்ப்போமாக.

வாழ்க தமிழ்மொழி!
வளர்க அதன் சிறப்பு!

வ. சித்திராங்கன்
தரம் 10

இன்றைய சமுதாயத்தில் தொலைக்காட்சி

இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி அபரிமிதமானதாக உள்ளது. இதன் வளர்ச்சிப் பாதையிலே ஒரு மைல் கல்லாக இருப்பது தொலைக்காட்சியின் கண்டுபிடிப்பாகும். தொலைக்காட்சி என்பது விஞ்ஞானத்தின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பாகும். முதலில் கறுப்பு வெள்ளைத் தொலைக்காட்சியே காணப்பட்டது. ஆயினும் பின்னர் விஞ்ஞானிகளின் அளப்பரிய முயற்சியினால் வர்ணத் தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டது. தொலைக் காட்சி என்பதன் அர்த்தம் யாதெனில் தொலை விலுள்ளதைக் காட்டுதல் என்பதாகும். அதாவது தொலைவிலுள்ளவற்றைக் காட்டும் கருவியாகும். இன்று தொலைக்காட்சி மூலம் கல்வி, கலை, கலாசாரம், மருத்துவம், விளையாட்டு, தொடர் பாடல், விஞ்ஞானம் என பல துறைகள் வளர்ச்சி யடைந்து வருகின்றன. தொலைக்காட்சி மூலம் உலக நடப்புக்களை அறிவதுடன் எமது அறிவையும் விருத்தி செய்து கொள்ள முடியும்.

வெளிநாட்டவர்கள் இவ்வாறான சிறப்புமிக்க தொலைக்காட்சியை ஆக்கத்திறனுடன் அபிவிருத்தி துறைகளில் பயன்படுத்தி தமது நாட்டை அபிவிருத்தி பாதைக்கு இட்டுச் செல்கின்றனர். ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் தொலைக்காட்சி வெறுமனே பொழுது போக்குக்காக மட்டும் பயன்படுத்துவது கவலைக்குரிய தாகும். ஆக்கபூர்வமான முறைகளில் தொலைக்காட்சி பயன்படுகின்றபோதும் அது சொற்ப அளவானதாகவே உள்ளது. பெரும்பாலான மக்கள் தொலைக்காட்சியை வெறும் பொழுது போக்குக்காகவே மட்டும் பயன்படுத்துகின்றனர். அவ்வாறில்லாமல் மக்கள் தொலைக்காட்சியை சிறந்த முறையில் பயன்படுத்துவர் எனின் இலங்கை எப்போதோ முன்னேறியிருக்கும்.

ஆனால் இலங்கையில் தற்போது திரைப் படங்கள், நாடகங்கள், பாட்டுக்கள், ஏனைய களியாட்டங்கள் போன்றவற்றை கண்டுகளிப்பதற்கே தொலைக்காட்சி பயன்படுகின்றது. மக்கள் மாலையிலிருந்து இரவு வரை தொலைக்காட்சிக்கு முன்னாலேயே தவங்கிடக்கின்றனர். அதில் காட்டப்படும் நிகழ்ச்சிகளில் தமது மனதை ஈடுபடுத்துகின்றனர். மாணவர்கள் படிப்பதை விட்டுவிட்டு படிக்கும் நேரங்களை தொலைக்காட்சி பார்ப்பதில் செலவிடுகின்றனர். விருந்தாளிகளை உபசரிப்பதை விட்டுவிட்டு தொலைக்காட்சியை இரசிக்கின்றனர். ஏனைய முக்கிய வேலைகளை விட்டுவிட்டு தொலைக்காட்சியே கதியென்று கிடக்கின்றனர். இதனால் அன்றாட வேலைகள் ஸ்தம்பித்து போவதுடன் உறவுகளுக்கிடையிலும் விரிசல்கள் ஏற்படுகின்றன.

தற்போது உறவினர்கள் யாராவது வீட்டிற்கு வர எண்ணினால் அவசரத்தையோ, அவசியத்தையோ அல்லது அன்பையோ கருத்தில் கொள்வதில்லை. மாறாக தொலைக்காட்சியில் குறிப்பிட்ட சில நாடகம் நடந்து முடிந்த பின்னரோ அல்லது தொடங்கு முன்னரோ உள்ள நேரத்திற்கே வர ஏண்ணுகின்றனர். ஏனெனில் தாம் அந்நாடகத்தைப் பார்க்க வேண்டும் என்பதுடன் அந்நேரத்தில் அவ்உறவினர்கள் அந்நாடகத்தைப் பார்க்க முனைவார்களே தவிர தம்மை கவனிக்க மாட்டார்கள் என்பதும் ஒரு முக்கிய காரணமாகும். இவ்வாறு உறவுகளுக்கிடையிலான விரிசல்களுக்கும், முறிவுகளுக்கும் தொலைக்காட்சி காரணமாக உள்ளது.

அடுத்ததாக மாணவர்கள் தொலைக்காட்சியில் விளையாட்டு நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், பாட்டு நிகழ்ச்சிகள், களியாட்டங்கள் போன்ற வற்றை பார்க்கவே தமது நேரத்தைச் செலவழிக்கின்றனர். ஆனால் மாணவர்களுக்கு பொருத்தமான கல்வி நிகழ்ச்சிகள் பல ஒளிபரப்பாகின்ற போது அவர்கள் அதைக் கவனிப்பதேயில்லை. இதனால் மாணவர்களின் பொன்னான நேரம் மண்ணாகிப் போவதுடன், அறிவு வளர்ச்சியும் குன்றுகின்றது.

இன்றைய மக்களின் இவ்வாறான விருப்பங்களை மிகவும் அறிந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்பவர்கள் அவ்வாறான நாடகங்களையும் திரைப்படங்களையும் ஏனைய மக்களின் விருப்புக்குரிய நிகழ்ச்சிகளையுமே பெருமளவில் ஒளிபரப்புகின்றனர். தொலைக்காட்சி நிறுவனங்கள் வருமானத்தை ஈட்டும் நிகழ்ச்சிகளில் கவனத்தைச் செலுத்துவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. அவர்கள்

"விளம்பரம் இன்றேல் வியாபாரமில்லை"

என்ற நோக்கிலேயே செயற்படுகின்றனர். இதனால் மக்கள் விரும்பும் விளம்பரதாரர்கள் வழங்கும் நிகழ்ச்சிகளையே ஒளிபரப்புகின்றனர்.

எனவே இவ்வாறான தகவற் தொடர்பு ஊடகங்களான தொலைக்காட்சியில் தீமைகளையும் சமுதாய பாதிப்புக்களையும் தவிர்க்கும் வகையில் நாட்டு மக்களுக்கும் இளம் சந்ததியினருக்கும் பயனளிக்கத்தக்க நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பது

அவசியம். இன்பமான பொழுதுபோக்கு உணர்வை வளர்ப்பதை மட்டும் நோக்கமாக கொண்ட நிகழ்ச்சிகளை குறைத்து அறிவு, கலைகள், பண்பாடு, பாரம்பரியங்கள் என்பவற்றை வளர்க்கும் வகையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

அத்துடன் சமூகத்தில் உள்ள மக்களும் பொறுப் புணர்வுடன் செயற்பட வேண்டும். அன்னம் நீரும் பாலும் கலந்த கலவையில் இருந்து பாலை மட்டும் பிரித்து எடுத்துக் குடிக்குமாம். அதுபோல மாண வர்களும், மக்களும் தொலைக்காட்சியில் ஒளி பரப்பாகும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை தவிர்த்து அறிவை வளர்க்கக்கூடிய நல்ல நிகழ்ச்சிகளை மட்டும் பார்ப்பதன் மூலம் தமது அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். இதன் மூலமே சிறந்த கல்வியறிவு மிக்க, ஆக்கத்திற னுடைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பமுடியும். நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லமுடியும.

ச. கோபிநாத்
தரம் 11

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கிய விமர்சனம்

- ஓர் ஆய்வு

"குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலைமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே"

என்பது நன்னூலில் பவனந்திமுனிவர். நல்லா சானுக்கு கூறிய இலக்கணம் இவ்வனைத்தும் ஒன்று சேரப் பெற்றவரே கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள். சைவமும் தமிழும் செழித்து மணக்கும் மட்டுவில் மண்ணின் வார்ப்பு, சைவத்தமிழ் காவலர் நாவலரின் வழித்தோன்றல் ஸ்ரீமான் கைலாசபிள்ளை, சுன்னாகம் குமார சுவாமிப்புலவர் போன்ற பழுத்த தமிழ் மகான்களில் நின்று பயன்கொண்ட தமிழ்க்கனி. ஆயிரம் பிறை கட்கு மேற்கண்ட பேரெளிளாளன். தேன் பிளிற்றும் குரலோன். இவனே விமர்சனத் திலகம் சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.

இலக்கியம் என்பது இலக்கினை உடையது. அதாவது வாழ்க்கைக்குரிய இலக்கினை இயம்பி வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் ஓர் அரிய சாதனம். இது போலவேதான் "இலக்கிய வழி" என்ற பண்டிதமணியின் நூல் வாழ்க்கைக்கு உறுதுணை. பண்டிதமணி சிறுகதையோ, இலக்கணமற்ற கவியோ, நாடகமோ எழுத வில்லை. கதை, கவிதை, நாடகம் இவைதான் அக்கால இலக்கியம் என்பர் வெள்ளையர். என்றாலும் இவை எழுதாத பண்டிதமணிக்கு "இலக்கிய கலாநிதி" என்ற பட்டம் வழங்கப் பட்டது. பொருள் பொதிந்த பட்டம். ஆகவே இலக்கியம் வேறு, இக்கால இலக்கியம் என்றார்களே அதுவேறு.

அடுத்து விமர்சனம். இன்று இதுவே திறனாய்வு எனப்படுகின்றது: பண்டிதமணி அவர்கள் எந்த நூலைப் பார்த்தாலும் அதன் சொல், பொருள், நோக்கித்தான் விமர்சிப்பார். அவர் எழுதிய இலக்கிய வழி தொடக்கம் அத்வைத சிந்தனை வரை அத்த னையும் அவ்வுண்மைக்கு என்றென்றும் சான்று.

பண்டிதமணியின் வசனநடை குருசீட பான்மை யில் பாட்டிகதை சொல்வதுபோல் மீண்டும் மீண்டும்

வாசிக்கத் தூண்டும் வகையில் அமையும். துள்ளிகுதித்து குறுநடை போடும் பொட்டிட்ட பான்மையில் நடக்கும். சுட்டிக்காட்டி பொட் டெனப் புலப்படுத்தும். நாவலர் மருகர் பொன்னம் பலப்பிள்ளை தவிர சின்னத்தம்பிப் புலவரையும் அவர் இலக்கியங்களையும் மீட்டி மீட்டி சொல் நோக்கும் பொருள் நோக்கும் சேர அழகுற எழுதுவார். வன்தொண்டர் ஒருபுறம், மறுபுறம் சிவசம்புப் புலவர். வன்தொண்டர் அந்தாதிப் புலி எனில், சிவசம்பு பிரபந்தம் கண்ட இமயம். யாம்பெருங் கலைக்காரிகைக்கு சிறப்புக் கண்டவர். இதனையே புகுவாய் முலம் புகுந்து வெகுவாய் அழகாய் நலமாயத் திறமாய் எடுத்தியம்புவார் இலக்கிய கலாநிதி அவர்கள்.

பண்டிதமணிக்கு கம்பரின் கைநாட்டு எனில் அது உயிர். விமர்சித்தே சுவைப்பார். பாரதம், சிந்தாமணி என இலக்கியத்திலும் ஒப்பிட்டு கம்பனின் கவிச் சிறப்பைக் கம்பீரமாகக் காட்டுவார். சீதையோ கண்ணகியோ என்பதனை சீதையைக் கம்பன் வாக்கால் உயர்த்தி கண்ணகியை இளங்கோ வாக்கால் தாழ்த்திக் காட்டுவார். கம்பன் சுவைக்கும் வில்லி பாரத சுவைக்கும் மேடு பள்ளம் நோக்கு வார். கம்பன் சொல்லுக்கு திருக்குறள் சங்க நூல்களிலிருந்து எடுத்துக் காட்டி மதிப்பிடுவார்.

பண்டிதமணியின் சிந்தனைக் களஞ்சியம் படிப் பவர் சிந்தையைத் தூண்டவல்லது. பல்சுவை மிக்கது. பண்டிதமணி அவர்கள் சமயம் பற்றி எழுதுகையில் நாவலர் நல்வாக்கை முதற்கூறி தார்ப்பரியம் எழுதிக் காட்டுவார். இவ்வாறே பண்டிதமணியின் அகத்திணை "அன்பின் ஐந்தினை" அகப்பொருளை சுருங்கக் கூறும் தொல் காப்பியத்துக்கு நேமிநாதம் வாய்ந்தாற்போல உரை நடையில் அன்பினைந்திணையை உளங்கொள வைப்பது.

"அத்வைத சிந்தனை" துவைதம் முலம் அத்துவைதம் விளக்குவது. துவைதம் என்பது இரண்டு. அ+துவைதம் = அத்வைதம் எனப் புணரும். அ+ஞானம் = அஞ்ஞானம் எனப் புணர்வதும் அது. இது தவிர கந்தபுராண தஷ்ண காண்டத்திற்கு உரை கண்டவர் கணபதிப்பிள்ளை. உரையும் உரையாசியர் பலரைத் தழுவிய தெனினும் தமது குறிப்பை ஏற்றத் தவறவில்லை. சிறுபொழுது ஐந்தோ ஆறோ என்பது துணி தற்பாலது என்பது பண்டிதமணியின் விளக்கம். இவ்வாறு பண்டிதமணியின் விமர்சனப் போக்கு பல்சுவை மிக்கது, பரந்தது, எல்லையற்றது, படிப்போர் மனதிற்குத் தித்திப்பும் திகட்டாத் தன்மையும் தருவது. ஆகவே அவர் விமர்சனக் குறிப்புக்களைத் திரட்டி ஆராய்ந்து அதிலுள்ள தீந்தமிழ்ச் சொல்களுக்கு பொருள் சுருக்கம் என்பன கண்டு செழுந்தமிழ் தேன் பருகி இன்புறுவோமாக.

சி. ஜனகன் முத்துக்குமார்
தரம் 12 - கலைப்பிரிவு

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் இலட்சியப் பெண்

பாழும் வறுமையின் மடியிலே சேற்றின் மத்தியில் செந்தாமரை மலர்ந்தது போலவும் முட்களின் மத்தியில் மோகன றோஜா மலர்ந்தது போலவும் மூட மக்களின் மத்தியில் மலர்ந்தார் பாரதியார். இவர் இந்தியாவிலே எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் செல்வப் புதல்வனாக பிறந்தார். இவரது இயற்பெயர் பாரதியார். இவர் இளவயதிலேயே கவியாற்றல் நிறைந்தவராக மிளிர்ந்தார். இதனால் இவருக்கு சுப்பிரமணியன் என்ற பட்டப்பெயர் வழங்கப் பட்டது. அன்றிலிருந்து இவர் சுப்பிரமணிய பாரதியார் என்று அழைக்கப்பட்டார்.

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் உடையவராக காணப்பட்டார். நெற்றியிலே

திலகமும் தலையிலே உறுமாலும் கொண்ட அழகிய உருவம். எவரையும் பாண்டியா என்று செல்லமாக அழைப்பார். "அச்சம் தவிர் ஆண்மை தவறேல்..." எனப்பாடி தூங்கிக்கிடந்த தமிழகத் தினை தட்டி எழுப்பி விழிப்புணர்வினை ஏற்படுத் தினார். "அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பது இல்லையே..." எனப்பாடி தமிழக மக்க ளிடையே பீதி என்னும் உணர்வை அகற்றினார். சிறுவர் முதல் பெரியவர்களுக்காக பாப்பாப் பாடல்களில் தொடங்கி பல்லாயிரம் பாடல்கள் பாடி முடித்தார்.

அதுமட்டுமல்லாமல் ஆங்கிலேயரின் ஆதிக் கத்தை எதிர்த்து இந்திய தேசிய விடுதலைக் காகவும் சமத்துவ உரிமைக்காகவும் போராட் டங்கள் தொடங்கிய காலத்திலே ஏனைய பல சமூகங்களில் இருந்ததைப் போலவே தமிழ்ச் சமூகத்திலும் பெண்களின் நிலை கவலைக் குரியதாக இருந்தது. அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. பெண்கள் படிப்பதற்கோ பயன் தரு தொழிலைச் செய்வதற்கோ சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. வீட்டையும், கணவனை யும் பிள்ளைகளையும் பேணுவதே அவர்கள் தொழிலென்று கருதப்பட்டது. பொம்மைத் திருமண பந்தத்திலுள்ளே சிறுமியர் வலிந்து நுழைக்கப் பட்டனர். கைம்பெண்கள் வேண்டாதவர்களாக வும், தீண்டாதவர்களாகவும் நடத்தப்பட்டனர். விதவை விவாகம் தடுக்கப்பட்டது. மொத்தத்தில் பெண்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர்.

பெண்கள் வாழ்வில் இருள் சூழ்ந்திருந்த இக்கால கட்டத்திலேதான் ஒளிவீசும் நிலவாக மகாகவி பாரதி தோன்றினார். மக்களின் நீடு துயில் நீக்கப்பாடி வந்த பாரதி தன் பாட்டுத் திறனாலே பெண்களுக்கு பெருமையைத் தேடித்தந்தார். அல்லல்பட்டு ஆற்றாது அழுது நின்ற பெண் களுக்கு விடுதலை தேடித்தருவதை நோக்கமாகக் கொண்டு பாடல்களை பாடி வந்தார்.

"மாந்தர் தமை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்" என்ற பாரதியின் சிந்தனை பெண்களின் உரிமைக் குரலுக்கான தாரக மந்திரமாக அமைந்தது. அச்சிந்தனையின் ஊடாக பெண்கள் இழிவு செய்யப்படக் கூடியவர்கள் அல்லர் என்பது வற்புறுத்தப்பட்டது. **"பெண்கள் நாட்டின் கண்கள்"** என்று தோற்றுவித்தது.

"பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்"

என்று பாடினார். மாதர்களின் அறிவை கெடுத்து அவர்களைப் பேய் மடந்தைகளாக்கிய மூடர்களை அவர் சாடினார். பாரதியின் ஆர்ப்பரிப்பு, ஆதங்கம் அனைத்தும் நியாயமானவையே. ஏனெனில் இறைவனுடைய படைப்பிலே ஆண்களைப் போலவே பெண்களும் அறிவு படைத்தவர்கள் என்பது திண்ணம்.

நாட்டின் சுதந்திரமே அக்காலத்தில் முக்கியமான தாகக் கருதப்பட்டது. **"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்"** என வீரசுதந்திரம் வேண்டிப் பாடினார். நாட்டுச் சுதந்திரம் அல்லாமல், வீட்டுச் சுதந்திரமும் வேண்டிப் பாடினார். வீட்டிலே பெண்கள் அடிமைகளாக சுதந்திரம் இல்லாமல் வாழ்வதை அவர் வேதனையுடன் நோக்கினார். பெண்கள் படிப்பதும், வெளியே செல்வதும் பாவம் என்ற கருத்தை பாரதியார் ஏற்று கொள்ள வில்லை.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்..."

எனப்பாடி பாவையரின் அடிமைத்தளை நீங்க குரல் கொடுத்தார்.

பெண்கள் சுதந்திரமாக வீட்டைவிட்டு வெளியே வர வேண்டும். அறிவைத் தேடவேண்டும். பட்டங்கள் பெறவேண்டும். சட்டங்கள் செய்ய

வேண்டும். வீட்டை மட்டுமல்ல நாட்டையும் ஆளவேண்டும். இதுவே பாரதியின் அகப்பார்வை யாக இருந்தது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
காதலொருவனைக் கைபிடித்தே யவன்
காரியம் யாவினும் கைகொடுத்து..."

என்ற பாடல்கள் ஊடாக பெண்கள் எவ்வாறு விளங்க வேண்டும் என எடுத்துக் காட்டினார். பெண்கள் காலம் காலமாக அஞ்சியவர்களாகவும் வெளியேவரப் பயந்தவர்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

"தாரதர் என்ற நிலைமாறி ஆண்களோடு
பெண்களும்
சரிநிகர் சமமாக வாழ்வோமிந்த நாட்டிலே"

எனப்பாடி ஆண்களுக்குச் சமமாக பெண்களும் வாழ வேண்டுமென்ற தைரியத்தை ஊட்டினார். மேலும் ஆண்களும், பெண்களும் சமம் என்ற தத்துவம் மேலோங்கினால்த்தான் இவ்வுலகம் அறிவியலில் உயரும் என நம்பினார்.

பாரதியின் பார்வையிலே தோற்றம் பெற்ற புதுமைப்பெண் ஒளிபடைத்த கண்ணையுடைய வள், உறுதி கொண்ட நெஞ்சினள்.

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட
பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச்செருக்கும்..."

எனப் பாடினார் புதுமைப் பெண்ணை. ஓர் உதயக் கன்னியாகவே காணுகிறார் பாரதியின் இலட்சியப் பெண் பல்கலையும் தொழில் நுட்பங்களும் கற்ற வளாகவிருப்பாள். பன்னூல்களையும் படித்திருப் பாள். உலகின் நாற்றிசை நாடுகள் பலவற்றின் புதுமைகளையும் தன்நாட்டிற்கு கொண்டு வருவாள். தன் தாய் நாட்டுக்காக உழைப்பாள். சமூகத்தை விட்டு விலகி வீடே தஞ்சமென்று கிணற்றுத் தவளையாக வாழும் பெண்களைத் தடுத்து அவர்களைப் பிறந்த சமூகத்திற்குப் பயனுள்ளவளாக வாழவைப்பாள். என்றெல்லாம் தன்மனச் சிறையில் புதுமைப் பெண்ணை வடித்தார்.

பாரதியின் இலட்சியங்கள் பல இன்று ஈடேறி வருவதைக் காணலாம். இன்று நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு பெண்கள் அறிவும் திறனும் பெற்று மிளிர்வது கண்கூடு.

பாரதியார் கண்ட சமுதாய கொடுமைகளும், சாதிச்சண்டைகளும் பெருமளவு குறைந்து விட்டன. ஒட்டு மொத்தமாக கூறின் பாரதியின் சிந்தனையால்த் தோன்றிய இன்றைய பெண்கள் புதுமை பெண்களாகவும் நாட்டின் கண்களாகவும் விளங்குகின்றனர்.

பொ. நதீஸ்குமார்
தரம் 13

காத்திருப்பு

சிறுகதை

அது ஒரு மீனவக் கிராமம். மாலை இளந்தென்றல் தன் குளுமையைப் பரப்பியிருந்தது. அதன் சுகத்தை வர்ணிக்கமுடியாது. ஆனால் அந்தச் சுகமானபொழுது அஞ்சலிக்கு பேரிடி விழுந்த ஒரு பொழுதாகவே காணப்பட்டது.

அஞ்சலி தன் ஓலை வீட்டில் சோகம் தீராதவளாய் ஒரு மூலையில் அமர்ந்திருந்தாள். அவள் தன் கண்ணீர் சிந்தும் முகத்தை கால்களுக்கிடையில் புதைத்திருந்தாள். தனது மகனுக்கு ஏற்பட்ட சோகத்தை அடக்கமுடியாது மனம் வெம்பினாள். மாலை இளந்தென்றல் அவள் கேசங்களை வருடியது. அவளது இந்நிலை அவளை தன் வாழ்க்கையின் பக்கங்களை புரட்ட வைத்தது.

அஞ்சலி மீனவக் கிராமத்திலே பிறந்த அழகான ஏழைப்பெண். அவளது இளமைக்காலம் பயனற்ற

ஏழ்மையானதாகவே இருந்தது. இருப்பினும் ஏதோ வழியாக அவளுக்கு திருமணம் முடிந்துவிட்டது. அவளது கணவன் இராசப்பன். ஒரு மீனவன். அவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும். மகள் பிறந்த சில தினங்களில் வலிப்பு வந்து ராசப்பன் இறந்துவிட்டான். பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு அவளுடையதாயிற்று. தாயின் கஷ்டங்கள் மற்றும் குடும்ப நிலைமை என்பவற் றாலும் ஆழமாகப் பதிந்திருந்த தன் தந்தையின் மரணத் தாலும் மிகவும் திறமையாகப் படித்து வந்தான் கண்ணன். ஆம்! அவர்களது ஒரே மகன் சிறப்பாகப் படித்து மருத்துவக் கல்லூரிக்கும் தெரிவு செய்யப்பட்டான். அங்கும் சிறப்பாக படித்து வந்தான்.

அவன் படிப்பில் சிறந்தவனாக விளங்குவதற்கு தாயின் அரவணைப்பு, தங்கையின் பாசம் என்பவற்றோடு நண்பர்களும் காரணமாக இருந்தனர். அவர்கள் கண்ணனுக்கு வேண்டிய உதவிகளை அருகிருந்து நிறைவேற்றி அவன் கல்வியில் சிறந்து விளங்க உதவினர். ஒருவாறாக வைத்தியராகும் நிலைக்கு வந்திருந்தான். இறுதித் தேர்வு மட்டுமே பாக்கி. அப்போது தான் நிகழ்ந்தது அந்த அவலம். ஆம் ஒரு பெரும் விபத்து. அவனது தலையில் பலத்த அடி, காலில் முறிவு அவனால் எழுந்திருக்கவே முடியாத ஒரு மயக்க நிலை. அரைமணி நேரம் முன்தான் அஞ்சலிக்கு செய்தி கிட்டியது. அவளது மகளின் வருகையை எதிர்பார்த்திருந்ததால் வைத்திய சாலைக்குச் செல்ல முடியாத நிலை.

அவளது நினைவுகளை கலைத்தது மகளின் குரல். உடனே அஞ்சலி அவளுக்கு நடந்த வற்றைக் கூறினாள். பின்னர் நிலைமையை உணர்ந்து இருவரும் வைத்தியசாலை நோக்கி நடந்தனர். அஞ்சலியின் நினைவுகள் கண்ணனைப் பற்றியும் அவனை வைத்தியராக வரவேண்டும் என நாளும்பொழுதும் ஊக்குவிக்கும் அவன் நண்பர்களைப் பற்றியும் இருந்தது.

வைத்தியசாலையை அடைந்தனர். அங்கு கண்ணன் பேச்சுமூச்சின்றி கட்டிலில் கிடந்தான். தலையிலும், காலிலும் கட்டு. அவனைச்சுற்றி கண்ணீர் சிந்திய விழிகளோடு நண்பர்கள் நின்றிருந்தனர். முதலில் ராஜாதான் அஞ்சலியுடன் கதைத்தான். "அம்மா கண்ணனுக்கு தலையில் பெரிய அடியாம்" "என்னாச்சு கண்ணனுக்கு" விம்மி அழுதாள் அஞ்சலி. தேற்றிக் கொள்ள இயலாதவர்களாய் மௌனம் சாதித்தனர் நண்பர்கள்.

சகஜ நிலைக்கு வந்ததும் மீண்டும் ராஜா கூறினான். "அம்மா பலத்த அடிபட்டதில் ரத்தம் உறைஞ்சு போயிருக்காம். வேற ஏதோ தலையில் பெரியகாயம் என்று சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமாம்" அஞ்சலி பத்திவிட்டாள். தங்கை தான் தேற்றினாள். "எவ்வளவு செலவாகுமாம்" தங்கையின் தேம்பிய குரல் "இருபத்தஞ்சாயிரம் முடியுமாம்" தயங்கினான் ராஜா.

பேரதிர்ச்சியாய் இருந்தது அஞ்சலிக்கு. ஒருபுறம் மகனின் மோசமான நிலை, மறுபுறம் பரீட்சை நெருங்கி வந்து கொண்டிருந்தது. நூறோ இருநூறோ சம்பாதிக்கும் அவளுக்கும், நண்பர் களுக்கும் தற்போது பணம் என்பது ஒரு பூதத்தைப்போல கண்முன் தாண்டவமாடியது. ஆனாலும் அதிஷ்ட தேவதை ஓரளவாவது கண் திறந்து இருந்தாள்.

மறுநாட் காலை அஞ்சலி சோகம் தீராதவளாய் கண்ணனின் அருகில் நின்றிருந்தாள். அப்போது சந்தோசமாக ஓடிவந்தான் கண்ணனின் நண்பன் ரகு. அவன் கையில் ஒரு காசோலை "அம்மா, கண்ணாவோட படிக்கிற பெடியன்கள் கண்ண னுக்க நடந்ததை கேள்விப்பட்டு வந்திருக்கினம். அவைதான் இந்தப் பணத்தையும் கொடுத்தவை" என்றான் ரகு. "அம்மா உடனடியாக கண்ண னுக்கு சத்திரசிகிச்சையை செய்யுங்கோ" என்றனர் உள்ளே வந்த அவன் சகபாடிகள்.

அஞ்சலியோ பதட்டத்துடன் டாக்டரிடம் சென்று கூறினாள். அவரும் மதியம் சத்திரசிகிச்சை செய்வதாக கூறினார்.

மதியம் கண்ணன் சத்திரசிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டான். அந்த குடும்பத்தின் ஏழ்மையை நீக்க ஒரே விளக்காய் இருந்த கண்ணனின் நிலை கூறமுடியாதிருந்தது. ஆனால் அஞ்சலியின் விழிகளில் கண்ணன் மீண்டும் எழுவான், மருத்து வராக வருவான். குடும்பத்தின் கஷ்டங்கள் நீங்கும் என்ற உறுதியோடு காத்திருப்பது தெரிந்தது. அங்கு கூடியிருந்த அனைவரும் கடவுளிடம் பொறுப்பை ஒப்படைத்து கண்ண னுக்காக காத்திருந்தனர்.

குடும்ப கஷ்டங்கள் நீங்கவும், நண்பர்கள் துயர் நீங்கவும், அனைவரும் மகிழ்ச்சி யடையவும் மீண்டும் பழைய கண்ணன் வருவானா? காத்திருப்போம்.....

த.திவாகர்

தரம் 10

இது கதையல்ல ஒரு நிஜம்

வீடே வெறிச்சோடிக் காணப்படுகிறது. காற்றுக் கூட வீச மறந்துவிட்டது. அந்தச் சிறிய வீட்டு விறாந்தை முலையில் சாய்மனைக் கதிரையில் ஓர் உருவம் ~ தளர்ந்த உடல் ~ உடல் மட்டு மல்ல மனமும்தான் ஆழ்ந்த யோகனையில், சமை யலறைக் கட்டில் இன்னொரு உருவம் கண்ணில் நீர் மல்கவும் மனம் கொந்தளிக்கவும் ஆம் அது அதே சிதம்பரமும் பங்கஜமுமே. சமயலறைக் கட்டுக்கு அருகே உள்ள அறையில் ஒரு இளமை யான தமிழ் பெண்ணின் நிழற்படம். அதற்கு ஒரு செவ்வரத்தம்பூ. ஆ! இது தவிர சிதம்பரத்துக்கு அருகில் நிலத்தில் பிஞ்சு ஒன்று. ஆம் இன்னுமே பள்ளிக்கு செல்லத் தொடங்காத அளவு சிறியவள். அவள் தான் நோஜா அவள் மனமும்கூட. ஏதோ விளையாட்டுப் பொருட் களுடன் இத்தனையும் இருக்கவும் சிதம்பரத்தின் மனம் கடந்த காலத்தையே சிந்தித்தபடி பெருமூச்சு எறிந்தவாறு.

சிதம்பரத்துக்கு இரண்டு பெண் பிள்ளைகள். ஒன்று தேவி மற்றவள் ராணி. இருவருமே அன்று சிதம்பரத்தின் உயிர்க்கண்கள். சிதம்பரமும் அவ்வாறேதான் பிள்ளைகளை வளர்த்தார். அதைக்கண்டு பொறாமைப்படாத அயலவர் ஒருவரும் இல்லை. அத்துணை பக்குவமாய் கிளிபோல வளர்க்கப்பட்டவர்கள். மூத்தவள் பருவமெய்தவும் அவளை ஒருவனுக்கு திருமணம் செய்து வைத்தனர். ஆனால் அதுவே அவர்களது குடும்பத்துக்கு விழப்போகும் முதல் இடி என்பதை சிதம்பரம் நினைத்துப் பார்க்கவே இல்லை. வெளிநாட்டு மாப்பிள்ளை பணக்காரன் எனக்கருதி பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து விட்டார்கள். அவனும் ஒரு மாதகாலம் அவளுடன் அவள் தந்தை வீட்டிலேயே தங்கிப் பெறுவ தெல்லாம் பெற்றுக் கொண்டு சென்று விட்டான். உடனே வெளிநாட்டிற்கு அழைப்பது என்று ஒரு மாதம்.... இரண்டு மாதம்... மூன்று மாதம்... என சென்றவன்தான் ஆறு மாத காலமாக தொடர்பே கொள்ளவில்லை. ஆனால் தேவியோ அவனையே மனதிலும் அவன் மகவையே வயிற்றிலும் சுமந்தபடி; சிதம்பரமோ படாதபாடு இல்லை. எங்கெங்கோ தகவல் எல்லா இடமும் தொடர்பு கொண்டும் பயன் காணமுடிய வில்லை. ஈற்றில் தேவியின் பிரசவத்தின்போதும் கணவன் இல்லை. பிரசவ வலி ஒருபுறம். கணவன் தவிப்பு இன் னொரு புறம். ஆண்ட வனிடம் பாரத்தைப் போட்டு பெற்றெடுத்தாள் ஒரு மகவை. அது பிறந்த நேரம் அப்போதுதான் தகவல் 'அவள் கணவன் முன்னரே திருமணமான வனாம். வெளிநாட்டில் இரண்டு பிள்ளைகளும் உண்டாம்" இடிவி ழுந்தவள் போலானாள் தேவி. சுயநினைவை இழந்தாள். வாழ்க்கையில் வெறுப்பு, சோகம்,

விரக்தி, ஏமாற்றப்பட்டு விட்டோமே என்ற மனக்கு முறல். ஒரு இரவு நஞ்சருந்திவிட்டாள். தங்கைக்கு திருமணம் நிச்சயித்த வேளை ஒரு பேரிடி.

அடுத்தடுத்த பேரிடிகளைத் தாங்கமுடியாது தத்தளித்தார் சிதம்பரம். மனம் கதற கதற ஆவி பதைபதைக்க துடிதுடித்துவிட்டார். ஆம் தேவி தன் குழந்தையை தாத்தா பாட்டியிடம் விட்டு விட்டு பிரிந்துவிட்டாள்.

காலச்சக்கரம் சுழல மறுத்தது. ஆனால் வலி எப்படியும் ஒருபோது ஆறத்தானே வேண்டும். இறைவன் கருணையை வேண்டி மறு கிளியையும் திருமணம் செய்து கொடுக்க தயாரானார். ஆனால் அதுவும் ஒரு குரங்கு என்பதனை அறியாமல் கடன்பட்டும் வீட்டை அடகுவைத்தும், அவரது மனைவியின் தாலியையும் அடகு வைத்து சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைத்தார் ஒரு கடை வியாபாரியை. அந்தோ பரிதாபம்! அவள் வாழ்க்கை கூடவா நரகம்.

திருமணம் நடந்து நான்கு ஐந்து மாதங்கள் இனிமையாக ஓடி முடிந்தது. அவள் வாழ்விலும் துன்பம் தாண்டவமாடத் தொடங்கியது. ராணியின் கணவன் சிவா ஒருநாள் குடித்துவிட்டு வந்து தகராறு செய்யத் தொடங்கினான். அவன் அதற்குக் காட்டிய காரணம் ராணிக்கு இன்னமே சந்ததிப் பாக்கியம் உருவாகவில்லை என்பதே ஆகும்.

மாமியாரும் இதையே சாட்டாக வைத்து மருமகளை செல்லரிக்கலானார். தந்தைக்காக அவர் கஸ்ரத்தை உணர்ந்தவளாய் பொறுத்துக் கொண்டிருந்த அவள்மீது மாமியாரினதும் அவள் கணவனினதும் தாக்குதல் அதிகமானது. இதையே சாட்டிக் குடிக்கத் தொடங்கிய சிவா நாளடைவில் போதைவஸ்துக்கு அடிமையனான். தான் உழைத்த எல்லாவற்றையும் செலவு செய்த பின்னர் மனைவியின் சீதனத்தையும் சுரண்டிச் சுரண்டி வஸ்துக்களைப் பெற்றுக் கொண்டான்.

இது ஒரு புறமிருக்க 'மலடி' என்ற பட்டம் கட்டி வாயாலும் கைகளாலும் கொட்டித் தீர்த்துக் கொண்டாள் மாமி. ஆம். அவளுக்கு மாமியார் செய்த கொடுமை அப்பப்பா! அன்று கொள்ளிக் கட்டையால் சுட்ட வடுக்கள் கூட இன்னும் ஆறவில்லை. ஒருநாள் எல்லாவற்றையும் தாங்க முடியாது சிதம்பரத்திடமும் முறையிட்டு விட்டாள். ஆனால்! அவர் கூறிய பதில், "பொண்ணுன்னா பொறுத்துத்தான் ஆகணும் தயவுசெய்து அனுசரித்துப் போம்மா" அதுதான்.

நாளுக்கு நாள் பிரச்சினை, சுமை, மனக்கசப்பு, விரக்தி என்பன ஏற்படவே முந்தநாள் இரவு நஞ்சருந்திவிட்டாள். ஆனால் அதிஷ்டம் அவள் தற்செயலாக மாமி, கணவன் அற்ற நேரத்தில் பக்கத்து வீட்டு ருக்மணி கண்டது. அவளுக்கு இத்தனை பிரச்சினையும் தெரியும். அவள் உடனே தன் கணவனின் ஓட்டோவில் அவளை ஏற்றிச் சென்று வைத்தியசாலை அவசரப் பிரிவில் அனுமதித்துவிட்டு சிதம்பரத்துக்கு போன் போட்டுள்ளார். அன்று சிதம்பரம் அவள் கூறியதை ஒரு பொருட்டாகவே கொள்ளவில்லை. ஆனால் இன்று இடிவிழுந்தாற் போலானார் சிதம்பரம். மயங்கியே விழுந்துவிட்டார். பங்கஜம் மனம் கதறி குழறி பதைபதைக்க நெஞ்சு படபடக்க வைத்தியசாலைக்குச் சென்றவருக்கு ருக்மணி சொன்னது எல்லாம் சேர்த்து தலையில் கல்லைப் போட்டாற்போல இருந்தது. நினைத்துப் பார்க்க வில்லை தன் முதல் மலர்போல் மற்றையதும் கருகும் என.

ஆம்! ஒரு தெளிந்த முடிவோடு இருக்க "என்னங்க! சாப்பாட்டைக் கொண்டு போங்க" என்று கண்கள் தழும்ப ஒரு குரல் அவர் சிந்தனையைத் திருப்பத் தோளில் துண்டைப் போட்டுக் கொண்டு வெளிக்

கிட்டார். இந்தச் சீதனக் கொடுமையும் பெண் அடிமையும் என்றுதான் தீரப்போகுதோ! என்ற மனஅழுத்தத்துடன் புறப்பட்டார். அவர் வாய் "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொழுத்துவோம்" என முணுமுணுக்க மிதியை மிதித்தார். உணவு கொடுக்க மட்டுமல்ல தன் னுடனே அழைத்து வந்து அவளை கயவரிட மிருந்து காப்பாற்றவும், இங்கு "டாட்டா" காட்டிய இச்சிறு மழலைக்கு தாய்ப்பாசம் பொழிந்திடவும் என்ற மனத்திடத்துடன் ஆனால் கண்ணில் மட்டும் கண்ணீர்த் துளிகளுடன்.

சி. ஜனகள் முத்துக்குமார்
தரம் 12 கலைப்பிரிவு

நாளைய உலகம் எம் கையில்...

நாளைய உலகம் எம்கையில்
நாடு வளர்வதும் எம்கையில்
ஆழ்கடல் விரிவதும் எம்கையில்
சூரியன் உதிப்பதும் எம்கையில்

பாலை குளிர்வதும் எம்கையில்
பசுபிக் பிராந்தியம் எம்கையில்
பாடல் உலகம் எம்கையில்
பஞ்ச பூதங்கள் எம்கையில்

இளைஞரின் கையில் எல்லாமே
இளந்தளிர் துளிர்வதை கண்டீரோ
உணர்ச்சிகள் அனைத்தும் உள்ளத்தில்
சுதந்திரதாகம் நெஞ்சினிலே

தொழில் வளம் அனைத்தும் எம்கையில்
தொண்டுகள் அனைத்தும் எம்கையில்
பீச்சையை ஒழிப்பது எம்கையில்
பீச்சாடன மூர்த்தி ஆவதும் எம்கையில்

உலக உண்மை இதுவன்றோ
இதனை யாரும் மறப்பாரோ
எதிர்காலத்தின் ஜோதிகள் நாமே
துணிவுடன் செயற்பட கூடவோமே

அநீதிகள் வளர்வதை தவிர்ப்போமே
அம்புய மலர்கள் ஆவோமே
அபிவிருத்தியின் வழியினிலே
எமது நாட்டை வழிநடத்துவோமே


முதியோர் சொல்லை பணிவுடனே
கேட்டு நாமும் வளர்வோமே
முதியோர் அனுபவத்தில் ஆயிரம் உண்மை கண்டோமே
அவர் வழியிலே நாளைய உலகம் நம்கையில்

நேர்மையின் சிகரத்தை தொடுவோமே
வெற்றியின் சிகரத்தை அடைவோமே
சுதந்திர தாகத்தை உணர்ந்தோமே
நீதியின் வழியில் நிற்போமே

நாளைய உலகம் எம்கையில்
நாடு வளர்வதும் எம்கையில்
ஆழ்கடல் விரிவதும் எம்கையில்
சுதந்திரத் தாகம் எம்கையில்

ஸ்ரீ. ஸ்ரீவாகீசன்
தரம் 12

Advanced Level Union Lunch



Welcome Speech by
the President Mas P Gopikrishna



Address by the Chief Guest Mr K Balasubramaniam,
Asst. General Manager, Bank of Ceylon,
Northern Province



The Guest of Honour Mr S V Gurupatham,
Asst. Manager, Commercial Bank, Jaffna
speaks on behalf of the Old Boys



Reply by the Principal


Environmental Day



The Chief Guest Mr M Ignatius, Lecturer, Palaly Teachers' Training College addressing the stude




Mr R Ragunathan at a tree planting ceremony



Shramadana by staff and students

English Day




Address by the Chief Guest
Mrs T Rajaratnam, Principal,
Chundikuli Girls' College




A section of the audience

Science Day



The Chief Guest
Dr N Sivayogan, Senior Lecturer & Head - Department of Physics, University of Jaffna addressing the students



Review on 'Science on Focus' by
Mr S Logeswaran, Teacher,
Jaffna Central College

Interact Club



Installation Ceremony



Blood Donation-Students being examined




Donation in Progress

Leo Club Installation Ceremony



The Chief Guest
Lion J Muthukumarasamy
District Coordinator, Northern
Region being led to the Hall



Members on stage



Books being presented to the Library

Scouts

Baden Powell Day



Address by the Chief Guest
Mr S Sebastiampillai,
Asst. District Commissioner



Mr J Amalaseelan,
Vice Principal addressing
the scouts

Awards Day



Mr S Ahembaranathan,
District Commissioner
is being led to the Hall

St John Ambulance Installation Ceremony



The Chief Guest Mr S Paramanathan, President, Humanitarian Agency, Jaffna being led to the venue



Principal handing over the service award to Dr A M Rajah, Chairman St John Ambulance National Council, Malaysia

Indoor Games Awards Day – organized by SCM



College Hymn being sung



The Chief Guest the Rev S K Kadirgamar, Methodist Superintendent Minister, Jaffna Circuit

Tamil Day



Address by the Chief Guest
Dr S Thirunavukarasu, Lecturer
Kopay Teachers' Training Coll



A section of the gathering



Cultural Show by the students

COLLEGE ACTIVITIES

ADVANCED LEVEL UNION

Patron: Mr. S. Thanapalan

Vice Patrons:

Mr. T. Nanthakumaran

Mr. U. Tharmakulasingam

President: P. Gopikrishna

Vice President: P. Kajaruban

Secretary: D. P. Johanan

Asst. Secretary: M. Sanji

Treasurer: P. Natheeskumar

Editor: G. Vageessan

Committee Members:

A. Edwin Rojar

N. Juhendra

S. Satheeskumar

M. John Marshal

Y. Arun

S. T. Sarvanantha

It is with great pleasure that I submit the Annual Report of the Advanced Level union for the year 2005.

The members of the Advanced Level union met on Tuesdays under the guidance of our Vice Patrons. The objective of the union is to give everyone an opportunity to participate in the programmes such as speeches, songs, and dramas. These programmes fulfilled several purposes. They were educative and interesting, and gave students an opportunity to exhibit their talents, and to develop their personality.

This year we had our Annual Lunch on 17th September 2005 in the Peto Memorial Hall. All the members worked hard with a sense of responsibility and courage. The event was very successful. The Chief Guest was Mr. K. Balasubramaniam, Asst. General Manager, Bank of Ceylon, Northern Province, and the Guest of Honour was Mr. S. V. Gurupatham, Asst. Manager, Commercial Bank, Jaffna. Our members and guests enjoyed our Annual Lunch very much. We witnessed a good gathering of colour and beauty in our midst. A spirit of friendship and cordiality prevailed on this occasion.

We are all very grateful to our Principal for giving us valuable guidance towards the success of the Annual Lunch. A special word of thanks to our Vice Patrons Mr. T. Nanthakumaran and Mr. U. Tharmakula singam for organizing the lunch and for their abiding interest. I would like to thank the committee and all the members of the Union for their cooperation and willingness in contributing their maximum towards the welfare of the Union.

D. P. Johanan
Secretary

AGRICULTURAL SCIENCE CLUB

Patron: Mr. S. Thanapalan
Vice Patron: Mr.P.M.Karunainayagam
President: T. Janahan
Vice President: S. Kesavanath
Secretary: G. Yathurson
Asst. Secretary: C. Cladson Dino
Asst. Treasurer:
A. Thivaharan
Editors: T. Thivagar
P. B. Benedict
K. Arashilankumaran
Committee Members:
E. Alstan Frank
G. Thanushan
S. Thanogan

As the secretary of the Agriculture Science Club of St John's College I have great pleasure in presenting the Annual Report for the year 2005. This year has been eventful and progressive. We did various activities in our school.

The Environmental Week was celebrated from May 30th to June 3rd to mark the World Environmental Day. In view of this, we had a Shramadana Programme in and around the school, and especially at the ground expansion project of the school. We conducted a general knowledge competition, and presented certificates and seedlings to the winners at the college assembly. Our club contributed cash gift to the Tsunami Fund and rendered their support to the Tsunami-affected children in many ways during their visit to our school. We went on an educational excursion to Meteorological Department and the govt. farm at Thirunelvely. The club continues to maintain the college garden, nursery plant production and distribution, and other agricultural projects.

I am proud to mention about six members who won the first three places in the Agriculture Science Quiz competition conducted by the Department of Education, Jaffna. T. Janahan, A. Thivaharan and G. Yathurson in Grade 11, and K. Arashilankumaran, T. Thivagar and A. Thasatharan in Grade 10. Congratulations to the winners!

Finally I thank our Patron - our Principal Mr. S. Thanapalan, Vice Patron Mr. P. M. Karunainayagam and all the teachers who gave us full support, timely advice and guidance.

G. Yathurson
Secretary

ASTRONOMICAL ASSOCIATION

Patron: Mr. S. Thanapalan
Vice Patron: Mr. R. S. Bavananthan
President: S. Gowthaman
Vice President: S. Niruban
Secretary: K. Ubamanyu
Asst. Secretary: S. Seran

Committee Members:

A. Visahan
S. Bakeerathan
V. Puvirajan
J. A. Joysubyson

It is with great pleasure that I submit the annual report of the Astronomical Association for the year 2005.

We annually conduct an astronomical workshop for the students of grades 7 and 9 imparting them a practical knowledge of the space bodies, identifying the various meteors. Workshop for this year was held on 11th March 2005. 247 students participated in it. We have planned to widen the scope of this workshop in future years.

We express our sincere words of gratitude to our Principal, Vice Principals, Vice Patron and teachers for the valuable advice, useful guidance and enthusiastic encouragement to augment our knowledge in space science.

K. Ubamanyu
Secretary

BANK OF CEYLON STUDENTS' SAVINGS UNIT

Patron: Mr. S. Thanapalan
Teacher in Charge:
Mr. S. Paramasivam
Student Managers:
P. Jerushan
P. Piranavan
S. Dileepan
S. Hamilton
A. Thirukumar

Committee Members:

S. Sivaraj
M. Kopinath
O. Kaylan
C. William
K. Kokulan
D.P. Johanan

Bank of Ceylon Students' Savings Unit of St. John's College was established on the 28th of April 2005 in order to induce the saving habit of students at school level. The "Runkekulu" introduced by Bank of Ceylon is maintained here by this extension unit. The students from primary level to the advanced level benefit immensely.

This Unit functions on the 1st Tuesday of each month. It is administered by the students under the guidance of our Principal and the teacher in charge.

Further, those who maintain Savings Accounts in this unit receive rewards, incentives and prizes. BOC according to its motto "The Bank you can trust" really plays an important role as a nation builder.

Student Managers

BOARDERS' UNION

Patron : Mr. S. Thanapalan
Vice Patrons: Rev. N.J. Gnanaponrajah
Mr. A. Henry
President: S. Gopikan
Vice President: M. Ragavan
Secretary: S. Sathees Patrick
Asst. Secretary: S. Dillaxson

I have great pleasure in submitting the Annual Report of the Boarders' Union for the year 2005.

The literary meetings are held regularly on Wednesdays, and the contributions made by the members towards the success of the Union were remarkable. We cover a wide range of topics in our programme in the meetings. We have interesting and lively speeches debates, story telling and singing both in English and Tamil. These meetings help students develop their personality.

We wish to thank our Principal, Vice Principals, and Vice Patrons for their valuable guidance and support.

S. Sathees Patrick
Secretary

CATHOLIC UNION

Patron: Mr. S. Thanapalan
Vice Patron: Sr. M. Zandra A.C.
President: A. Edwin Rojar
Vice President: J. Andrew Nishanthan
Secretary: S. Hamilton
Asst. Secretary: A. Vithoozen
Treasurer: G. Niloshan

